தென்மொழி

தென்றல் திரு.வி.க. தம்நினைவு நன்மலரை
இன்றமிழ்ப்பா வாணர் வெளியிட்டு-மன்றில்
அளிக்க, முதல்வர் அருட்செல்வர் பெற்றார்
களிப்போடு நெஞ்சங் கனிந்து.

நிகழ்ச்சி: திருவாரூர், திரு. வி. க. சிலை திறப்பு விழா.
நாள்: தி. பி. 2004, நளி, 17 (2—12—73).

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி: 11. ஓலை: 6, 7. விலை 75 காசு.



திருவாரூர் திரு.வி க. சிலை திறப்பு விழாவில் முதல்வருடன் பாவலரேறு.

செங்கதிர் புலர்ந்தது செந்தமிழ் வானில்!

எங்கும் தமிழர்கள் ஒன்றாய் இணைந்தனர்!
இன்னுயிர் உடல்—என நன்றாய்ப் பிணைந்தனர்!
'பொங்கும் உணர்வினல் மொழியையும் இனத்தையும்
புதுக்கினர்'—என்றே—கொட்டடா முரசம்!
பூத்தது வாழ்வெனக் கொட்டடா முரசம்!

உண்மைத் தமிழர்கள் உலகெலாம் பரந்தனர்!
ஒண்டமிழ்த் தாயினை உலாவர விட்டனர்!
திண்மை உளத்தொடு தீந்தமிழ் பரப்பினர்!
தீமைகள் அகன்றவென் றூதடா சங்கம்!
தீய்ந்தது மடமையென் றூதடா சங்கம்!

முன்னைத் தமிழர்கள் மொய்த்தனர் நாடெல்லாம்;
மூங்கிய பழமைகள் முகிழ்த்தன புதுமையாய்!
அன்னைத் தமிழ்மொழி உலகெலாம் ஆர்ந்திட
அலர்ந்தது பொழுதென—அறையடா முழவம்!
அகன்றது பகையென—அறையடா முழவம்!

கீழ்த்திசை நாடுகள் கிளர்ந்தன தமிழால்!
கிளைத்தது தமிழ்க்குலம்; தீய்ந்தது கீழ்மை!
வாழ்த்திசை அளாவி எழுந்தது வானில்;
வளர்ந்தது தமிழென—மிழற்றடா யாழை!
வாழ்ந்தது நிலமென—மிழற்றடா யாழை!

செங்கதிர் புலர்ந்தது செந்தமிழ் வானில்!
செறிந்தனர் உலகெலாம் சேரபாண் டியனர்!
எங்கணும் சோழனின் இனம்படை கொண்டது!
எந்தமிழ் வாழ்ந்ததென் றியம்படா குழலில்!
ஏர்ந்தனர் தமிழரென் றியம்படா குழலில்!

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி: 11. ஓலை: 6,7.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

கும்பம்-மீனம். தி. பி. ௨00௫ (மார்ச்-ஏப்-1974)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

என் சிங்கைச் செலவு!

சிங்கப்பூரில் இருந்து கொண்டு இதனை எழுதுகின்றேன். கீழ்த்திசை நாடுகளில் மிகச் சிறந்ததும், உலகிலேயே இரண்டாவது அழகு நகரமாக மிளிர்வதும், தகரம் (Tin), இழுவை (Rubber), மிளகு (Pepper) ஆகிய முப்பொருள்களுக்கும் உலகவணிகச் சந்தையிலேயே முதலிடம் பெற்றுத் திகழ்வதும் சிங்கப்பூர். இதன் பிற சிறப்பியல்களைப் பற்றிப் பின்னர் விரிவாக எழுதுவேன். இக்கால், அந்த நாட்டு முன்னேற்றத்திற்கும், நம் நாட்டுப் பின்னிறக்கத்திற்கும் அடிப்படைக் கரணியங்களாக உள்ள சில செய்திகளை மட்டுமே கூற விரும்புகின்றேன்.

சிங்கப்பூர் ஓர் அழகிய நாடு. இந்த அழகு இயற்கையாகவே வந்து விடவில்லை. இயற்கையழகுக்கே இந்த நாட்டில் இடமில்லை.

மக்களுடைய அயராத உழைப்பும், ஊக்கமும், பொதுமை உணர்வுமே இந்த நாட்டை மிகவும் அழகு மிக்க ஒரு நகரமாகச் செய்துள்ளன. இங்குள்ள மக்கள் அனைவரும் உழைக்கின்றனர். சென்னைத் தெருக்களிலும், மற்ற நகரங்களில் உள்ள ஒதுக்கிடங்களிலும், திண்ணை, திடல்களிலும் நின்று கொண்டும், அமர்ந்து கொண்டும், புகைத்துக் கொண்டும் வீண் அரட்டை பேசியே, தமிழ் நாட்டுக்கே, குறிப்பாக இந்திய நாட்டுக்கே மிகமிகச் சுமையாக இருக்கும் சோம்பேறிகளைப் போல் ஓர் ஆளையும் இங்குக் காண முடியாது. எங்குப் பார்த்தாலும் உழைப்பு! உழைப்பு! உழைப்பு!

சிறு குழந்தைகளிலிருந்து பெரிய முதியவர்கள் வரை அனைவரும் என் நெஞ்சைக் கவர்கின்றனர். பன்னிரண்டு அகவைக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களை வேலையில் அமர்த்திக் கொள்ளக் கூடாதென்னும் தடைச் சட்டம் இங்கு உள்ளதால், தமிழகத்தையும் பிற இந்திய மாநிலங்களையும் போல் சிறுவர்கள் தொழிற்சாலைகளிலோ, பிற உழைப்பிடங்களிலோ வேலை செய்வதை என்னால் பார்க்க முடியவில்லை. இரவலர்களே இங்கு இல்லை. இங்கு உண்ணப்படாத பொருள்களோ கிடைக்காத பொருள்களோ—அறவே இல்லை. உலகில் உள்ள அனைத்து உணவுப் பொருள்களும், விலை பொருள்களும், வினைப் பொருள்களும் இங்குள்ள கடைகளில் தங்கு தடையின்றிக் கிடைக்கின்றன. இத்தனைக்கும் இங்கு எந்த உணவுப் பொருளும் விளைவது இல்லை. விளைவிக்க நிலமும் இல்லை. இங்குள்ள பொருள்கள் அனைத்தும் வெளிநாட்டுப் பொருள்களே! மக்கள் குடியிருப்புக்கும், தொழிற்சாலைகளுக்குமே போதிய நிலமின்றிக் கடலையே தூர்த்து நிலமாக்குகிற பணி, தலையாய பணியாக இங்கு நடைபெறுகின்றது. தமிழகத்தில் காணுகின்ற காட்சிகளில் ஒன்றையும் இங்கு என்னால் காண முடியவில்லை.

மக்களில் ஒருவர் கூட அழுக்குடை யணிந்தோ கிழிந்த உடையணிந்தோ என் முன்னர் தென்படவில்லை. எல்லாரும் தூய்மையான அழகிய உயர்ந்த ஆடைகளையே உடுத்துக் கொண்டு உலவுகின்றனர். தமிழகத்தில் உந்துப் பழுதுபார்ப்பவர்களும், சில தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களும், கரியும் நெய்க்கசண்டும் படிந்து, பிசுக்கு நெடி வீசும் களிமண் நிற உடைகளை அணிந்து செல்வதைப் போல் ஒரு தொழிலாளியையும் இங்குப் பார்க்க முடியாது.

இவர்கள் வாழ்கின்ற முறைகளுக்கேற்பவே, வாழ்கின்ற இடங்களையும் நகர்ப்பகுதிகளையும் பாதைகளையும் மிகவும் தூய்மையாக வைத்துக் கொள்கின்றனர். மக்கள் மனத்தில் இயல்பாகவே உழைப்புணர்வும் தூய்மை உணர்வும் சுரந்து பொங்கி வழிகின்றன.

சென்னையைப் போல் மூக்கைத் தொளைக்கும் தீ நாற்றமுடைய தெருக்களைப் போல் ஒரு சிறிய தெருவும் இங்கில்லை. கழுவிய அழுக்கு நீரைப் போக்கு வரத்துள்ள தெருக்களில் கொட்டுவதும், வருவோர் போவோ ரெல்லாரும் அதை மிதித்துக் கொண்ட போவதும் சென்னை, சேலம், திருச்சி, தஞ்சை, மதுரை, கோவை போன்ற தமிழக நகரங்களுக்கே சொந்தமான காட்சிகள்! அத்தகைய பொதுத் தூய்மைக் கேடும் இல்லை; பொதுத் தூய்மைக்குக் கேடு செய்யும் சூழுகாயக் கேடனும் இங்கு இல்லை. பழங்களைக் கழுவி நெகிழிப் பைகளில் இட்டுத் தரும் உயரிய பழக்கம், தமிழகத்தில் உள்ள விற்பனைக் கொள்ளையர்களுக்கும், அழுகிய பழங்களையும் நல்ல பழங்கள் என்று வாடிக்கையாளர் தலையில் கட்டும் குமுகாயத் திருடர்களுக்கும் எக்காலத்தில் வருமோ சொல்ல முடியாது.

இங்குள்ள தெருக்கள் அங்குள்ள வீடுகளைவிடத் தூய்மையாக இருக்கின்றன. தெருவில் ஒரு சிறிய தாளையோ, பழத்தோலையோ காணமுடியாது. பழத்தைத் தின்றுவிட்டு நமக்கென்ன என்று தெருவில் வீசியெறியும் சோம்பேறிகள் இங்கு வாழவே முடியாது. சென்னைத் தெருக்களில் உள்ள அரட்டைக் கூட்டமோ, திரைப்பட நடிகர்களின் ஆரவாரச் சுவைஞர் கூட்டமோ இங்கு அறவே இல்லை. இங்கு உலாவரும் அமைச்சரையோ அதிகாரியையோ பார்க்க முடியாது. அனைவரும் அடக்கமாகப் பணியாற்றி நாட்டை முன்னேறச் செய்வதில் கண்ணும் கருத்துமாக ஈடுபடுகின்றனர்.

இந்நாட்டில் ஏழ்மை பல ஆண்டுகளுக்கு முன்பே விரட்டப்பட்டு விட்டது. பள்ளிப் பிள்ளைகள் சிலரை "இங்கு ஏழை மக்கள் வாழ்கின்றார்களா?" என்று கேட்டேன். "ஏழை மக்கள் என்றால் யார்?" என்று என்னை அவர்கள் திருப்பிக் கேட்ட கேள்வி என் செவிகளைக் குளிர வைத்தது; உடலைப் புல்லரிக்க வைத்தது; இப்படியும் ஒரு நாடா என்று வியக்கவும் வைத்தது.

தொழில் பஞ்சமில்லாத நாடு சிங்கப்பூர்! தொழிலாளர்கள் தாம் கிடைக்க வில்லை. எனவே ஊதியப் போராட்டமோ, வேலை நிறுத் தங்களோ, ஊர்வலங்களோ இங்கு என்றும் நடப்பதில்லை. 'வாழ்க' 'ஒழிக' ஆரவாரங்கள் எங்கும் கேட்பதில்லை. எல்லாரும் மெய் வருந்த உழைக்கின்றார்கள். எல்லாரும் நன்றாக உண்கின்றார்கள்; எல்லாரும் அழகாக உடுக்கின்றார்கள். கனவிலும் கற்பனையிலும் நான் கண்ட காட்சிகள் அனைத்தும் நினைவிலும் நிகழ்ச்சியிலும் இங்கு நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன!

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்று ஏட்டளவில் படித்துக்கொடுக்கும் தமிழகம்–இந்தியா–என்னும் இடங்களைப்

போலின்றி, இங்கு உண்மையாகவே கல்வி கண்போல் போற்றப் படுகிறது. பள்ளிக்குச் செல்லாத ஒரு சோம்பேறிப் பிள்ளையையோ, தன் பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்பாத ஒரு பொறுப்பற்ற குடும்பத்தையோ இங்குப் பார்க்க முடியவில்லை. பள்ளிக் குழந்தைகள் எல்லாம் பச்சைக் கிளிகள்! அழகிய உடை! மலர் முகம்! மாம்பழ நிறம்! காட்சியே கொள்ளை அழகு! தமிழகத்தில் உள்ள பள்ளிக் காட்சிகள் போல் ஊளைமூக்கும், அழுக்கு முகமும், மண்ணடைந்த சட்டையுமாய் ஒரு குழந்தையைக் கூட இங்குக் காண முடியாது. தெருவில் மண் வாடையே வீசுவதில்லை. புழுதியை வாரி இறைத்துக்கொண்டு உந்துகள் போகும் காட்சி, நான் சிங்கப்பூருக்கு வானூர்தி ஏறிய அன்றே மறைந்து விட்டது. இங்கு, அரசினரின் குப்பை வண்டிகளை, நான் ஆளேறும் வண்டிகள் என்று ஏமாறிப் போனதுண்டு.

தெருக்களில் மொத்தை மொத்தையாய்ச் சாணி கிடப்பதும், தமிழகத்தில் உள்ள சோம்பேறி இளைஞர்களைப் போல் மாடுகளும் எருமைகளும் வண்டி ஓடும் தெருக்களில் குறுக்கிலும் மறுக்கிலும் மென்னடை போடுவதும் இங்குக் கருத்துக்கும் எட்டாத காட்சிகள். மலக்கூடைகளும் மலந்தூக்கும் தலைகளும் இங்குள்ள பிள்ளைகளுக்கு மட்டுமன்று பெரியவர்களுக்கும் கூட, சொன்னால் விளங்காது. ஓரினத்தையே அவ்விழிந்த வேலைகளுக்கென ஒதுக்கித்தள்ளும் மாந்தக் கொடுமைகள் இங்குள்ள மக்கள் உடம்பணுக்களில் எந்த அணுவிலும் இல்லை. இன்னும் பல்லாயிரம் கோடிச் சிறப்புகள்! ஒரு நாடு இப்படியும் முன்னேற முடியுமா என்னும் பெரு வியப்பான கேள்வி என் உள்ளத்தில் மலைபோல் எழுகின்றது! இத்தனைச் சிறப்பு களையும் வரிசைப் படுத்திப் பின்னர் எழுதுவேன். இப்பொழுது நான் எழுத வந்தது ஒன்று. அஃது இது.

துறக்கம் (சொர்க்கம்) என்று தமிழக–இந்தியப் 'புராணீகர்கள்' புளுகுவார்களே, அதைப் போல் உள்ள இந்த நாடு எப்படி முன் னேறியது என்று பலரையும், பல தரத்தினரையும், பல தொழிலினரை யும் பார்த்துக் கேட்டேன். அவர்கள் எல்லாரும் ஒன்றையே சொன்னார்கள். அவர்கள் சொன்ன விடை என் மண்டையைக் குடைந்தது; நம் தமிழக அமைச்சர்களை நோக்கி என்னை நெட்டித் தள்ளியது. அவர்களின் கீழ் நாம் வாழுதற்கு என்ன கேடு செய்திருப் போம் என்று எண்ணச் செய்தது. அந்த விடை என்ன தெரியுமா? "இங்குள்ள தலைமை யமைச்சர் மிகவும் கெட்டிக்காரர்; அறிவாளி. தமக்கே எல்லாம் தெரியுமென்று அகங்காரம் கொள்வதில்லை, அவர்! யார் யார் எந்தெந்தத் துறையில் அறிவுள்ளவர்களாக விளங்கு கிறார்கள் என்று கண்டறிந்து, அந்தந்தத் துறைக்கு அவரவர்களைப்

செவ்வாய்க் கோளில் மக்கள் குடியேற முடியும்.

—பேராசிரியர் **வீட்டர் சிசுகோவுசுகி**

மருமம் நிறைந்த சிவந்த கோளமான செவ்வாய்க்கு ஆளில்லா விண்கலன்களை அனுப்பியும், செவ்வாயின் பரப்பில் சோவியத்து மார்சு–3–ஐ மெல்ல இறக்கியும் ஆராய்ந்ததிலிருந்து, அந்தக் கோளையும் மாந்தன் வெல்லும் காலம் அதிக தூரத்திலில்லை என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. மாந்த வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும், செவ்வாய்க்கோளில் மாந்தன் பெற முடியும் என்பது உறுதிப் படுத்தப்பட்டால்தான், அவன் அங்குச் சென்று வாழ்வது பற்றி எண்ண முடியும்.

நிலத்திலிருந்து பன்னூறாயிரம் கல்லெடை பலவேறு சரக்கு–களைச் செவ்வாய்க்கோளுக்கு அனுப்பி விட்டால், அங்கு மாந்தன் வாழ்வதற்குரிய சூழ்நிலைகளைத் தோற்றுவித்து விடலாம் என்பது வீணே. எனினும் நிலத்தில் நாம் பழக்கப்பட்டுள்ள நிலைகள் அனைத்தையும்,–எவை இன்றி நாம் வாழ முடியாது என்று

(முன் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்திக் கொள்கிறார். அவர்கள் அனைவரின் அறிவையும் அவர் மதிக்கின்றார். எனவேதாம் திட்டங்கள் சரியாக வகுக்கப் பெறுகின்றன. வகுக்கப் பெற்றவை அனைத்தும் செயல்களாக மலர்கின்றன. ஒன்றும் இடையில் ஒழுகுவதில்லை, ஒருபுறத்தில் போய் ஒதுங்குவதில்லை. இரவிலும், பகலிலும் கொள்ளை போவதில்லை; அனைத்து நலன்களும் அனைத்து மக்களுக்கும் பகிரப் படுகின்றன. எனவே செல்வம் மட்டும் அன்று; இன்பமும் இங்கே கொழிக்கின்றது" என்பது தான் அவ்விடை. ஆம்! "எல்லாத் துறைகளும் எனக்குத் தெரியும்! நானே எல்லாவற்றுக்கும் அதிகாரி! நான்தான் எல்லாருக்கும் அறிவுரை சொல்வேன்; செய்வேன்" என்று நினைக்கும் 'தான்–தோன்றி'களும் 'தான்தின்னி'களும் இந்தியாவையும்–தமிழகத்தையும் ஆளும் வரை அந்த மண்ணுக்கு மட்டுமன்று, மக்களுக்குமே விடிவில்லை! விளைவுமில்லை!

கருதுகிறேமோ அவை அனைத்தையும்-தோற்றுவித்து விடுவதற்கான முன்தேவைகள் செவ்வாய்க் கோளில் உள்ளன.

கரி, நீர்.

செவ்வாய்க் கோளில் வளி மண்டலம் உள்ளதெனினும், அது மிகவும் அடர்த்தி குறைந்ததாகும். நிலவுலகிலிருக்கும் காற்று அழுத்தத்தைவிட, செவ்வாய்ப் பரப்பில் நூறு மடங்கு அழுத்தம் குறைவு. அக்கோளின் வளி மண்டலத்தில் பெரிதும் கரியிருவளியே காணப்படுகிறது. எனவே, பல்வேறு மாழைகளுடன் கரி சேர்க்கை யடைந்து, கரிமங்களின் வடிவில் செவ்வாய்ப் பரப்பின் மேலுறையில் காணப்படலாம். அந்த வளி மண்டலத்தில் மிகக் குறைந்த நீரே உள்ளது; நிலவுலகைச் சுற்றியுள்ள வளி மண்டலத்தில் இருப்பதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு குறைவான நீரே அங்குக் காணப் படுகிறது. அதில் பெரும்பாலும் உயிர்வளி இல்லையென்றே கூறி விடலாம்.

செவ்வாய்ப் பரப்பில் நீர் இல்லாததாலேயே அந்தவளி மண்டலத் திலும் நீராவி இல்லை என நாம் ஊகிக்கலாம். ஒருவேளை, மணல் அடுக்கால் மூடப்பட்ட உறைந்த பனிக்கட்டி வடிவத்தில் அந்தக் கோள், நீரைத் தேக்கி வைத்திருக்கிறதோ, என்னவோ? தவிர, செவ்வாய்க் கோளின் உட்பகுதியில், நீர் பல பொருள்களுடன் சேர்ந்து காணப்படுகிறது. நீர் இருந்தால் அதனைச் சிதைத்து நாம் உயிர்வளியையும் நீர்வளியையும் பெறுதல் இயல்வதே.

ஆக, செவ்வாயில் மூலப் படிவங்களோ, அல்லது இயற்கைப் பொருள்களோ அறவே இல்லையானாலும்கூட, கரிச் சேர்க்கையையும், நீரையும் கொண்டு நாம் அதனை ஈடு செய்துவிட முடியும். செவ்வாய்க் கோளில் உள்ள கரிச் சேர்க்கைப் பொருள்களின் அளவு மிகையானது. எடுத்துக்காட்டாக, செவ்வாயின் வளி மண்டலத்தில் மட்டுமே உள்ள கரிச்சேர்க்கைப் பொருள்களை வேதியல் முறையில் பதப்படுத்தினால், அவற்றிலிருந்து 8,00,000 கோடி பலவேறு வேதியல் பொருள்களை யும், செயற்கைப் புரதங்களையும் நாம் பெற முடியும். அந்த வேதியல் பொருள்களின் அளவு பல கோடி ஆண்டுகளுக்குப் போதுமான தாகும். அந்தக் கோளிலுள்ள கரியிருவளியையும், நீரையும் பயன் படுத்தி, வரும் நூற்றாண்டுகளின் வேதியலாளர்கள், நமது நிலத்தில்

எண்ணெய், நிலக்கரி ஆகியவற்றிலிருந்து ஆக்கப்படும் எல்லா வேதியல் பொருள்களையும் உருவாக்கிவிட முடியும்.

நீர்மக் கரிகளின் (Hydro carbons) சேர்க்கை.

செவ்வாய்க் கோளின் எதிர்கால வேதியல் தொழில்துறையின் அடிப்படை அங்குள்ள கரிச்சேர்க்கைப் பொருள்களே என நம்பலாம். சில நிலைமைகளின் கீழ்க் கரியிருவளியைக் கரிவளியாகவும், உயிர் வளியாகவும் பிரித்து விடலாம். மிகக் கடினமான கதிர்வீச்சின் விளைவாக, ஒரு செயல் ஊக்கியைப் பயன்படுத்தி, 5000 பாகை வெப்பநிலையில் கரியிருவளியை அவ்வாறு சிதைத்துவிட முடியும்.

190 பாகை வெப்ப நிலையில், 5 வளி மண்டல அழுத்தத்தில், ஒரு செயல் ஊக்கியின் உதவியினால் கரியிருவளியையும் நீர்வளியையும் செயல்படச் செய்து, 'பாரபினு'ம், 'ஒலிஃபினிக்' நீர்மக் கரியும் நிறைந்த கூட்டுப் பொருளை உருவாக்கி விடலாம்; இதுவே செயற்கை எண்ணெயாகும். பொருள்களை வேதியல் முறையில் பதப்படுத்திப் பல்வேறு இயற்கைப் பொருள்களைப் பெறுதலும் இயல்வதே.

செயற்கை எண்ணெயைப் பெறுவதற்காகக் கரியிருவளியிலுள்ள நீர்மக்கரிகளையும், நீர்வளியையும் வேதியல் முறைச் செயற்பாட்டுக்கு உட்படுத்தும் முயற்சி முதன்முதலாக 60 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டது. ஆனால் இயற்கையாகவே மலிவான முறையில் எண்ணெய் தோண்டி எடுக்கப்பட்ட பின்னர், அச்செயற்பாடு நடைமுறையில் பயன்படுத்தப்படவில்லை. அதனை மாந்தன் செவ்வாய்க்கோளில் பயன்படுத்த வேண்டிய தேவை வருங்காலத்தில் ஏற்படலாம். நீரை நீர்வளியாகவும் உயிர்வளியாகவும் பிரிப்பது போன்று, கரிவளியை, கரியிருவளியாகவும், உயிர்வளியாகவும் பிரிப்பதற்குப் பெருமளவு ஆற்றல் தேவைப்படும். செவ்வாய்க் கோளில் அவ்வாற்றலைச் சூரியனிலிருந்தோ, அணுச்செயற்பாட்டிலிருந்தோ பெறுதல் இயல்வதே. இத்தகைய செயற்பாடுகளின்போது வெளிப்படும் உயிர்வளி மெல்ல மெல்லச் செவ்வாய்க் கோளின் வளி மண்டலத்தை நிரப்பி, உயிர்ப் பொருள்கள் உயிர் வாழத்தக்க சூழ்நிலையை ஏற்படுத்தி விடுமன்றோ? இஃது ஓர் அறிவியல் கற்பனை அல்லது கற்பனையில் எழுந்த கட்டுகதை அன்று. மலிவான ஆற்றல் மூலங்கள் கிடைத்தால், இத்திட்டத்தை நடைமுறையாக்கும் திறமை இன்றைய அறிவியலாளர்களுக்கு உண்டு. O

பாவேந்தர் பாரதிதாசன்.

—பெருஞ்சித்திரன்.

(காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில்
9—2—73-இல் நடைபெற்ற முத்தமிழ் விழாப்
பாட்டரங்கில் பாடியது)

பாப்புலவர் தந்திறமை பாடும் அரங்கிற்கு
மாப்புலவ ராய்த்தலைமை சான்ற மதிமிகுந்தீர்!
பேரா சிரியப் பெருமாண்பீர்! கல்வியெனும்
ஆரா வமிழ்துண்ணும் ஆண்மைமிகு மாணவரீர்!
எல்லார்க்கும் என்றன் இனிய தமிழ்வணக்கம்!
சொல்லார்க்கும் பாட்டில் சுவையார்க்கும் வண்ணம்;இங்குத்
தெய்வப் புலவர் திருவள் ளுவர்பற்றி,
கைவருசெஞ் சொற்புலவர் கம்பர் திறம்பற்றி,
ஈட்டுபுகழ் மாயா இளங்கோ எழில்பற்றி,
பாட்டுக் கொருபுலவன் பாரதி சீர்பற்றிப்
பாப்பொழிந்து வைத்தார்கள்; பாராட்டிக் கேட்டீர்கள்!
நாப்பொழிவால் உள்ளம் நனைந்து பதம்பட்டு
வித்துதற்கு நல்ல விளைநிலமாய்த் தோன்றுகின்றீர்!
கத்துதற்குத் தேவையில்லை; கன்னித் தமிழ்விதைகள்—
பாவேந்தன் பாவிதைகள் பன்னூறு வைத்துள்ளேன்.
சாவேந்தா நல்விதைகள் சாவியாய்ப் போவதில்லை.
அந்த விதையெல்லாம் அள்ளித் தெளிக்கின்றேன்.
எந்த வகையாய் விளையுமென எண்ணுகின்றீர்?
உள்ளத்தே ஊன்றி உயிரில் முளையெடுக்கும்.
வெள்ளத் துணர்வில் விளைந்து பயிராகும்.
காலத்தே முற்றிக் கருத்துக் கதிர்சாய்க்கும்.
ஞாலத்தே நம்விளைவு நல்ல விலைபோகத்
தக்கவொரு நேரமிது! நல்ல தமிழ்விளைச்சல்
மிக்க பரவுமொரு மேலான காலமிதாம்!
அக்காலந் தன்னில் அடியெடுத்து வைக்கின்றோம்!
எக்காலும் ஞாலம் இருண்டிருக்கப் போவதில்லை.
போர்த்த இருளொருநாள் போகத்தான் போகும்;எழில்
ஆர்த்த ஒளிவந்தே ஆளத்தான் ஆளும்;எமை
மாய்த்த இழிநிலைகள் மாளத்தான் மாளும்;இதை
வாய்த்த பெரும்புலவன் வான்முட்டச் சொல்லிவிட்டான்!
பாரதிதா சன்;அவன்பேர்; பாரதிக்கும் நல்லாசான்!
ஈரமிகு நெஞ்சால் இவனவற்குத் தாசனென்றான்!
மற்றபடி தாசனென்றால் மாண்புகுன்றப் போவதில்லை.
கற்றபடி தானே கணக்குவரும்; பாட்டுவரும்!

நல்லபடி பாவேந்தன் தன்னை அளப்பதற்கு
வல்லபடி ஒன்றில்லை; வாய்த்தபடி தள்ளுபடி!
அப்படியாய்ச் செய்தி அளந்தபடி யாயிருக்க
எப்படி யாய்வீர் எழிற்பாவேந் தன்பாட்டை?
பாருங்கள், பாவேந்தன் பாரதிதா சன்திறத்தை!
ஓருங்கள்! நான்சொன்ன துண்மையா பொய்யாவென்
றப்போது சொல்லுங்கள்! ஆன்றமைவாய்க் கேளுங்கள்:
எப்போதும் காணீர் இடர்.

பாரதி தாசன் பகருவான் தன்னை:
"நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான்"—என்றே!

இதைவிடத் தன்னை எளிதாய் எவன்சொன்னான்?
புதைவிடந் தோண்டி ஆராய்ச்சி பண்ணி
இதோ,இவன் இப்படி; அதோஅவன் அப்படி
எனவோர் அறிஞன் இயம்பிட வேண்டும்!
மனத்தைத் திறந்து மற்றும் உரைப்பான்:

"சீர்த்தியால் அறத்தால் செழுமையால் வையப்
போர்த்திறத் தால்,இயற்கை புனைந்தஓர் உயிர்நான்!"

எப்படி அவன்திறம்? அவனே உரைத்தது!
அப்படிப் புனைந்த ஆருயிர் அவனுக்குக்
கைவரும் பாட்டுத் திறத்தைக் கணிக்கிறான்.
பொய்வரா வாயால் புகல்வதைக் கேளுங்கள்;

"கவிதை எனக்கொரு கைவாள்!-மார்புக்
கவசம் எனக்கு வாய்மை!
புவியினில் தீமைகள் வீழ-நான்
போரிடும் ஓர்படை வீரன்"

எப்படி அவன்றன் கொள்கை?
எப்படி அவன்றன் வேகம்?
தப்படி அடித்துத் தள்ளித்
தலைகீழாய்ப் பொய்யைப் பேசிச்
செப்படி வேலை செய்யும்
சிறுமதிப் புலவன் அல்லன்.
இப்படி நான், காண்-என்பான்.
இதுவேயென் கொள்கை என்பான்.

'இருளினை வறுமை நோயை
இடறுவேன்' என்பான்; இன்னும்

ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்.
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்.

– என்பான் புலமை இறுமாப் போடு!
தன்பாத் திறத்தைத் தனித்தனி யாகச்
சொன்னால் அஃதொரு சுவைதரு விருந்தாம்!
என்னால் முடியுமோ இல்லையோ; எதற்கும்
இயன்ற வரைநான் எடுத்துக் கூறிட
முயன்று பார்க்கின்றேன். முடிவது முடிக!

பாவலர் ஒருவர்க்குப் பதின்திறம் வேண்டும்.
நுண்ணோக்கு, கற்பனை, உவமை, பாத்திறன்,
எண்ணும் இயற்கை ஈடுபாடு, உலகியல்,

மனவியல் அறிவு, மற்றுமொழி யறிவு,
புரட்சி யுள்ளம், பொதுவுணர்வு–இவற்றில்
வரட்சி யில்லா மனநிலை வேண்டும்!
பார்க்கும் பொருளெலாம் பசையொடு நோக்கி
ஆர்க்கும் அழகை அறியும் நற்றிறன்
புலவோர்க் கல்லால் புறத்தார்க்கு வருவதில்!
பலவோர் புலவராய்ப் பயின்று திரியலாம்!
உண்மைப் புலவோர்க்கு உள்ளமும் அறிவும்
நுண்மையாய்ப் படிந்து நோக்குதிறம் வேண்டும்!

எல்லாப் பொருளையும் யாவரும் பார்க்கலாம்.
எல்லார்க்கும் அவற்றின் இயல்புகள் தெரியா!
மாலைப் பொழுதை நாளும் பார்க்கிறோம்!
வேலை யிருந்ததா? நமக்கந்த வேளையில்?
பாவேந்தர் மாலையைப் பார்ப்பதைப் பாருங்கள்:
நாவேந்திச் சொன்னால்தான் நல்லது தெரியும்!

"அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்;
அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே, நீதான்?
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேயியற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?"

எப்படி அவர்க்கு மாலை இருந்தது?
அப்படி நாமதை அறிந்திட வில்லையே!
காரிருள் நிலவைக் 'கவின்நிலா' வென்றே
யாருந்தான் புகழ்வார்; மகிழவார்; யாப்பிலே!
ஆனல், பாரதி தாசற் கந்நிலா
ஈனு நின்ற எழுச்சியைப் பாருங்கள்.

" உனைக்காணும் போதினிலே என்னுள் ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடுவ தில்லை;
நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின் நிலவே உனைக்காணும் இன்பந் தானே?"

முழுமை நிலாவை மேலும் காண்கிறார்:
கொழுமை அழகுக் குலாவலைப் பாருங்கள்!
சிறுவர்க் கிதனைச் செப்பிப் பாருங்கள்!
உருவம் மாறும்; உணர்வும் பெருகும்!

" முழுமை நிலா! அழகு நிலா!
முளைத்ததுவிண் மேலே—அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே!

அழுதமுகம் சிரித்துபோல்-
அல்லி விரிந்தாற்போல்-மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித்தட்டு
தொத்திக் கிடந் தாற்போல்!

குருட்டு விழியும் திறந்ததுபோல்
இருட்டில் வான விளக்கு-நம்
பொருட்டு வந்தது பாடி ஆடிப்
பொழுது போக்கத் துவக்கு!
மரத்தின் அடியில் நிலவுவெளிச்சம்
மயிலின் தோகை விழிகள்!-பிற
தெருக்கள் எல்லாம் குளிரும் ஒளியும்
சேர்த்து மெழுகும் வழிகள்!

முழுமை நிலா! அழகுநிலா!

எப்படி அவரின் நிலவுக் காட்சி?
இப்படி யாநாம் எழிலைக் காண்கிறோம்?

-(தொடரும்)

ஆசிரியர் மடல்!

அன்புள்ளங்களே!

அயல் நிலத்தினின்று எழுதும் முதல் மடல் இது.

தமிழன் மட்டுமல்லன், மாந்தன் எங்குச் சென்றாலும், பிறந்தாலும், வாழ்ந்தாலும், எம்மொழி பேசினாலும், எவ்வுடை பூண்டாலும் அவன் ஒருநிலைத் தரத்தினனே!

அன்று உயர்ந்த மலைகளில் காட்டு விலங்காண்டியாய் வாழ்ந்தான்.

அவனிடமும் அன்பிருந்தது; குடும்பம் இருந்தது; பகையிருந்தது; நட்பிருந்தது; அச்சமிருந்தது; அவலமிருந்தது! இன்றுள்ள மாந்தனிடம் உள்ள அனைத்தும் இருந்தன.

இன்று அவன் உயர்ந்த மலைகளைப் போல் வானுயர்ந்த கட்டடங்களில் வாழ்கின்றான். இவனிடமும் அன்பிருக்கின்றது; குடும்பம், பகை, நட்பு, அச்சம், அவலம்—முதலிய அனைத்தும் இருக்கின்றன. சுருங்கச் சொன்னால் அன்று அவனிடமிருந்தவை அனைத்தும் இன்றுள்ள இவனிடமும் குடிகொண்டுள்ளன. ஒன்றும் குடிபோகவில்லை.

மாந்தன் புறச்சூழல்களால் மாறுபடுகின்றான்.

அகநிலைகளால் என்றும் எவ்விடத்தும் எந்நிலையிலும் ஒருவனே!

அகம் அழிவதில்லை; புறம் மாறுகின்றது!

இந்த உண்மைகளை நான் அங்கிருந்தே சொன்னேன். இங்கு வந்த பின்னும் அவையே உண்மையாக உள்ளன. எனவே சிங்கை எனக்குப் புதிதாகப் படவில்லை.

வானூர்தியில் பறந்த சூழல் புதியதாக எனக்குப் பட்டிருக்கும் என்று நீங்களெல்லாம் கருதியிருப்பீர்கள். இல்லை; நான் எத்தனையோ நூற்றாண்டுகளாக வானூர்தியில் பறந்தது போன்ற உணர்வைப் பெற்றுள்ளேன். எனவே அது-அவ்வுணர்ச்சி- சூழல் யாவும் எனக்கு இயல்பாகவே இருந்தன!

வானூர்தியில் உள்ளவர்கள் – என்னொடு வந்தவர்கள் -யாவரிடமும் கலகலப்பாகப் பேசினேன். உண்டேன்: ஊடாடினேன்.

எனினும் அவற்றையெல்லாம் முன்பேயே செய்ததுபோல்-பார்த்தது போல் உணர்ந்தேன்.

இங்கு, நிலத்தில் கால் வைத்தபின்-அங்குள்ள நிலம் போல்தான் இங்கும்-நம் நாட்டில் உள்ளது போல்தான் உணர்ந்தேன்.

இங்குள்ள மலையன்ன மனையடுக்குகள், கப்பல்கள், ஊர்திகள் சாலைகள், மக்கள் நிலைகள்-அனைத்தும் எனக்குப் பழையவையாகவே பட்டன.

ஒன்றுக்கும் நான் புதியனல்லன். பழமைக்கும் பழமையானவனாக நான் இருந்தேன்; அவையும் எனக்கு அப்படியே! புதுமைக்கும் புதுமையானவனாக நான் இருக்கின்றேன். நானும் அவற்றுக்கு அப்படியே!

நெஞ்சாங்குலை நோய்!

த. சலாவுத்தீன், அறி இ., ஆ.ப்.

மாந்த உடலில் மிக முகாமையான உறுப்பு நெஞ்சாங்குலை யாகும். இஃது ஓர் அழுத்தும் குழாய்ப்போல் வேலை செய்கின்றது. இதன் மூலம்தான் நம் உடலின் எல்லாப் பாகங்களுக்கும் குருதி செலுத்தப்படுகிறது. நெஞ்சாங்குலையிலிருந்து 'தமனி'கள் என்கின்ற குழாய்களின் மூலம் குருதி செலுத்தப்படுகின்றது. நம் உடலுக்குத் தேவையான ஊட்டச் சாரங்கள், உயிரகம் ஆகியவை நம் உணவி லிருந்து நமக்குக் கிடைக்கின்றன.

நாம் உண்ணும் உணவு உடலுக்குள் பல கூட்டு வேதியல் மாறுதல்கள் அடைந்து, நம் உடலியல் வினைகளுக்கும் உடலமைப் புக்கும் தேவையான ஆற்றலாக மாறுகின்றது. இவ்வினை நமக்கு மிகத் தேவையான தொன்றாகும். ஆகையால்தான் நம் உடல் நலம் உணவு உண்ணும் பழக்கத்தையும் உண்ணும் உணவையும் பொறுத்து அமைகின்றது. சோவியத்து நாட்டைச் சேர்ந்த ஏ. பொக் ரோவுசுகி (A. Pokraovsky) என்பார் இதைப்பற்றி விரிவாக விளக்கியுள்ளார்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

இவ்வரி எத்துணை உண்மை! எத்துணை ஆழம்! எழுத்துக்குள் உள்ள ஒலியணுக்களுங்கூட உண்மையே சாற்றுகின்றன.

இங்குள்ளார் அனைவரிடமும் நெய்வேலி, கோவை, தஞ்சை, சென்னை, நெல்லை—ஆகிய அனைத்து உள்ளங்களையும் பார்க்கின்றேன். உணர்கின்றேன்.

பெயர்கள் வேறு வேறு!
உருவங்கள் வேறு!
உள்ளங்கள் ஒன்றே!
செயல்கள் ஒன்றே!

இன்னும் நான் கூட்டத்தில் பேசத் தொடங்கவில்லை. என் அருகில் வரும் கூட்டந்தான் என்னோடு பேசிக் கொண்டுள்ளது!

இங்குள்ள எல்லா உள்ளங்களிலும் நீங்கள் இருக்கின்றீர்கள்! எனவே நான் உங்களுடன்தான் இருக்கின்றேன்.

உங்கள் உள்ளமும் நுண்மை பெற்றால் நீங்களும் என்னைப் போல் உணர்வீர்கள்!

அன்பு,

சிங்கை—2.
தி.பி.௨௲௫.
கும்பம்.௨௮.
(12—3—74)

அறிவுடன் நாம் உணவை உண்டுவந்தால் நல்ல உடல் நலத்துடனும் நோய்களில்லாமலும் இருக்கலாம். சோவியத்து நாட்டில் உணவு மருத்துவமனைப் பிரிவில் குலைத் தொடர்பான நோய்களை உணவு கொடுக்கும் முறைகளினாலும் மாறுபட்ட உணவுகளைக் கொடுப்பதினாலும் தீர்க்கின்றார்கள்.

குலைத் தொடர்பாக மிகத் தொல்லைதரும் நோய் குருதிக் குழாய்களைப் பொறுத்ததாகும். இதை 'ஆர்டிரியோகிளரோசிசு' (Arteriocleresis) என்று கூறுகின்றார்கள். இது கொழுப்புப் பொருட்கள் சிதைவடைவதால் உண்டாவதாகும். இதனால் குருதியிலுள்ள "கொளசுடிராலி"ன் (Cholesterol) அடர்வு மிகுதியாகின்றது. ஆகையால் இது குருதிக் குழாய்க்குள் படிந்து விடுகிறது. இதைக் குருதிக் குழாயில் துருப்பிடித்து விட்டது எனக் கூறலாம். இவ்வாறு துருப்பிடிப்பதால் குருதிக் குழாயின் உள்ளமைப்பு மாறுபடுகின்றது. இதனால் குலைக்குப் போகும் குருதியின் அளவு குறைகின்றது. இதனால் மூளைக்குச் செல்லும் ஆற்றலும் குறைகின்றது. இதனால் நடுத்தர அகவையினரின் குருதிக்குழாய்கள் அடைபட்டு உயிருக்கு ஏதம் உண்டாகின்றது.

இந்த ஏதத்துக்குக் காரணியம் மிகுந்த சாரமுள்ள உணவை உண்ணுவதாகும். மிகு சாரமுள்ள உணவை மிகுதியாக உண்டால் மேற்சொன்ன குருதிக்குழாய் நோய் வருகின்றது. உட்கொள்ளும் உணவில் மிகுந்த அளவு கொழுப்பு இருப்பதனால் மிகுதியான அளவு "கொலாசுடிரல்" உண்டாகின்றது. இந்த நோயினால் தாக்கப்படுகிறவர்கள் பொதுவாகப் பருமனுக உள்ளவர்கள்தாம். மிகுதியான கொழுப்பு குலையின்மேல் மிகுந்த பளுவைப் போடுகின்றது. அதனால் குலை வேலை செய்வது தடைப்படுகின்றது. ஆதலால் நடுத்தர அகவையினர் உண்ணும் உணவின் 'கலோரி' மதிப்பு 2600—2800 'கிலோ கலோரி'களுக்குமேல் இருக்கக் கூடாது.

இந்தக் குருதிக் குழல்நோய் மிகை அளவு புலால் உணவுகள் உண்ணும் நாடுகளில் மிகுதியாக இருக்கின்றது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சப்பானியர்கள் தங்கள் உணவில் அரிசி, காய்கறிகள், பயிர் நெய்கள் ஆகியவைகளைச் சேர்த்துக்கொள்ளுகின்றனர். மாறாக அமெரிக்கா, பின்லாந்து, இங்கிலாந்து ஆகிய இடங்களிலுள்ளோர் அதிக அளவு புலால் உணவுகளை உட்கொள்ளுகின்றனர். இந்நாடுகளில் 'குருதிக்குழல்' நோய் மிகுதியாக இருக்கின்றது.

ஆகையால் நாம் விலங்குக் கொழுப்பைக் குறைத்துக் கொண்டு பயிர்க் கொழுப்பை மிகுதியும் சேர்த்துக் கொள்ள வேண்டும். பயிர்க் கொழுப்பு 'குருதிக்குழல்' நோய் வராமல் தடுக்கின்றது.

மிகுந்த அளவு இனிப்புப் பண்டங்களையும் உண்ணக் கூடாது. ஆனால் குறைந்த அளவு இனிப்பு நமக்குச் சுவையாக இருப்பது மட்டுமல்லாமல் உடலுக்கும் அது பயன்படுகிறது. மிகையளவு சருக்கரைப் பண்டங்கள் உண்பதாலும் 'குருதிக்குழல்' நோய் உண்டாகின்றது. மிகை யளவு சருக்கரைப்பொருள் உண்பதால் குருதி ஓட்டத்தில் மிகுந்த அளவு 'இன்சுலின்' கலந்து விடுகின்றது. இது கொழுப்புக் காரங்களைப் பிரிக்கின்றது. இதனால் நோய் உண்டாகின்றது. ஆகையால் சருக்கரைப் பொருட்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும். மாவுப் பொருளுள்ள காய்கறிகளையும் பருப்புகளையும் பயன்படுத்த வேண்டும்.

சோவியத்து நாட்டில் குலைக் கோளாறு உள்ளவர்களுக்குக் கீழ்க்காணும் வகையில் உணவு கொடுக்கப்படுகின்றது.

காலை 8 மணிக்கு: பழத்தின் சாறு, 'கேரட்', தக்காளி அல்லது 'ஆப்பிள்' (100 சிற்றெடை (Gram), புரத உணவு, 50 சிற்றெடை வேகவைத்த ஊன். இத்துடன் தேநீர் அல்லது குளம்பி கொடுக்கப்படும்.

11 மணிக்கு: காய்கறிக்கூட்டு, ஒரு ஆப்பிள்.

நண்பகல் 2 மணிக்கு: காய்கறிகளால் செய்யப்பட்ட வடிநீர். வேகவைத்த ஊன் (55 சிற்றெடை)

4 மணிக்கு: ஒரு வரட்டித் துண்டும் கொதிக்கவைத்த (Eglantine water) நீரும் கொடுக்கப்படுகின்றன.

இரவு 7 மணிக்கு: மீன் 120 சிற்றெடை, தயிர், மரக்கறி அடை, தேநீர்.

மேற்கண்ட உணவில் 100 சிற்றெடை புரதம், 70 சிற்றெடை கொழுப்பு, 150-180 சிற்றெடை மாவுப்பொருள் இருக்கின்றன.

நாம் நல்ல உடல் நலத்துடன் வாழ நம் உணவுப் பழக்கத்தை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். நம் நெஞ்சாங்குலைக்காக நாம் நம் உணவில் பல சத்துகளின் அளவை அளவாக உண்போமாக. இந்தப் பழக்கத்தினால் குலைக் கோளாறுகளில்லாமல் உடல் நலத்துடன் வாழலாம். O

ஆரிய வல்லாண்மையின் வரலாறு.

தொகுத்தளிப்பவர்: **தாயம்மாள் அறவாணன்.** க.மு.

கேரள நாட்டுப் பரமேசுவர மேனன் அரிய ஆறு நூல்களின் ஆசிரியர். கொச்சி மாமன்னர் கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் இளங்கலை பயின்றவர். பம்பாயில் பயின்று, வழக்கறிஞர் பட்டம் பெற்றவர். கொச்சி அரசரின் வழக்கறிஞராய்ப் பணியாற்றினர். ஆனல் அவரது உள்ளம் மெய்யறிவு நாட்டத்தில் ஆழ்ந்து கிடந்தது. அதனல் வழக்கறிஞர் பணியை விட்டு விட்டு, நாராயணசாமி குரு என்ற மெய்யறிவாளரொடு தோழமை கொண்டார். மேனனின் பேரறிவில் பெரிதும் ஈடுபாடு கொண்ட நாராயண குரு தம்முடைய அனைத்து நிறுவனங்களுக்கும் அவரை உரியவர் ஆக்கினர். 'தர்மதீர்த்தன்' என்ற புதிய பெயரையும் அவருக்குக் கொடுத்தார்.

துறவி தர்மதீர்த்தர், நாடு முழுவதும் கால்நடையாகவே செலவு மேற்கொண்டார். வழிநெடுக மடங்கள், கோயில்கள் ஆகியவற்றைக் கூர்ந்து பார்வையிட்டார். 'இந்து'சமயத்தைத் திருத்திச் செப்பனிட விரும்பினர். தம்முடைய கருத்துகளை ஆங்கிலத்தில் எழுதி, தட்டெழுத்தில் அணியமாக்கி ஆந்திர நாட்டிலுள்ள வாலத்தியோ என்ற ஊரிலுள்ள மடத்தில் வைத்து விட்டுச் செலவைத் தொடர்ந்தார். இவர் இலாகூரில் இருந்தபோது, இவருடைய நண்பர்கள் சிலர் இவரது நூலை அச்சிட்டு 'The Menace of Hindu Imperialism' என்ற பெயரில் 350 பக்கங்களில் வெளியிட்டனர். 1941, 1946, 1969 ஆகிய ஆண்டுகளின் மறுபதிப்புகள் வெளிவந்தன. ஆங்கிலம், மலையாளம், மராத்தி ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ள இந்நூலின் தமிழ்ச்சுருக்கம், வி. தி. சகாயம் என்பவரால் செய்யப்பட்டு அண்மையில் வெளிவந்துள்ளது. (கிடைக்குமிடம்—சகாயப் பதிப்பகம், 8, ஆம்சுசாலை, சென்னை. 10)

இந்தியாவிற்கு, கி.மு. 2000 அளவில் புகுந்த ஆரியர், திராவிட மக்களை ஒடுக்கிய நிகழ்ச்சி, அனைத்து அரசர்களையும் கவர்ந்த நிகழ்ச்சி, கோயில் வழிபாட்டாளர் ஆகி இழைத்த கொடுமைகள், பொதுமக்களை மூட நம்பிக்கைகளில் ஆழ்த்தியமை முதலான செய்திகள் அருமையாக விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் குறிக்கப்பட்டுள்ள அரிய செய்திகள் சில மட்டும் ஈண்டுத் தொகுத்தளிக்கப் படுகின்றன.

கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன் ஆரியர்கள் நட்டாசியாவிலிருந்து வந்தவர்கள் என்று நம்பப்படுகிறது. முதல் முதல் வந்தவர்கள் இந்த நாட்டை அடைந்து, உள்நாட்டு மக்களோடு போர் புரிந்து அவர்களைத் துரத்தவும், அழிக்கவும் வந்த வீரக்கூட்டத்தினரே யாவர். எனவே அவர்கள் பஞ்சாபிற்கு வந்தபோது இந்தியாவில் இருந்த எல்லோரையும் வெறுத்தனர். இந்தியர்களை 'மிலேச்சர்கள்' என இழிவாக எண்ணி, தங்கள் கடவுள்களிடம் அவர்களை அழித்துவிடும்படி வழிபாடு செய்தனர். அப்படிப்பட்ட வழிபாடுகள் இருக்கு மறையில் காணப்படுகின்றன. இப்படியாக ஏறக்குறைய 500 ஆண்டுகள் ஒரே போரும் வெறுப்புமாகக் கழிந்தன. படையெடுத்து வந்தோர் ஆரியர்கள். உள்நாட்டு மக்களனைவரும் பழங்குடிமக்கள். போர் நடந்தது ஏறக்குறைய பஞ்சாபைச் சுற்றிய இடங்களில். மதக்குருக்கள் தூயராய் இருக்கவில்லை. அவர்கள் உரைநடையில் எழுதும் எழுத்தாளர்களாக இருந்தனர். அவர்களுக்குக் குடும்பங்கள் இருந்தன.

பஞ்சாபிலிருந்து அவர்கள் சிறிது சிறிதாகக் கிழக்கு முகமாக, கங்கைப்பள்ளத்தாக்கு நோக்கிச் சென்றார்கள். அங்கு, அவர்கள் தங்களையொத்த சிறந்த அறிவும் பண்பாடும் உடைய மாபெரும் மக்கள், மற்றும் மன்னர்களை எதிர்த்தனர். சில ஆரியர்கள் இந்திய மக்களுடன் கலந்து கலப்புமணம் புரிந்து, அவர்கள் பழக்க வழக்கங்கள் மற்றும் பண்பாட்டையும் ஏற்று, ஒரே இனமாக மாறினர். ஆரியர் ஆரியரல்லாதார் என்ற பாகுபாடு இல்லாமலிருந்தது. அவர்கள் இராமாயணம், மாபாரதம் ஆகியவற்றில் சித்தரிக்கப்பட்டிருக்கும் மிக உயர்ந்த நாகரிகங்களை நிறுவினர். ஆனால் சில மதக்குருக்கள் இந்த நெருங்கிக் கலத்தலை ஏற்கவில்லை. அவர்கள் மறையோதலைப் பிழைப்புத் தொழிலாக்கித் தங்களைப் பிறரிடமிருந்து பிரித்து, தனித்து வாழத் தலைப்பட்டனர்.

மதக்குருக்கள் தங்கள் ஊதியத்துக்காக ஊழல்கள் பல செய்தனர். புதுக் கடைப்பிடிப்புகளையும், புதுக் கடவுள்களையும் ஏற்படுத்தி, தங்களுக்கு மட்டுமே காவுகொடுக்கும் உரிமையுண்டு என்று கூறினர். அனைத்து மக்களையும் விட உயர்வானது மதக்குருக்கள் குழுகாயம் என்று தங்களை அவர்கள் ஒரு தனிக்குல

-மாக அமைத்துக் கொண்டனர். மன்னர்களும் அவர்களுக்குத் தாழ்ந்தவரே. பார்ப்பனரின் தொடக்கம் அதுதான். அவர்கள் குலம் மற்றும் தனித்தியங்கும் கொள்கைகளை உருவாக்கினர். ஆனால் மன்னர்களும் சில முகவர்களும் இவற்றை எதிர்த்துப் பல நூற்றாண்டுகளாகப் போராடினர். இந்திய மக்கள் தங்கள் உரிமையை இழந்து வேற்றுவர்களால் கைப்பற்றப்பட்டு மதக்குருக்களால் அடிமைப்பட்டுப் போகும் வரை அவர்கள் போராடிப் பார்த்தனர். இப்படித்தான் காவு கொடுக்கும் மதக்குருக்கள் பார்ப்பனக் குலமாய் மாறினர். அவர்களது குலம் பற்றிய சட்டங்கள் பல நூற்றாண்டுப் போராட்டத்திற்குப் பின் படிப்படியாக எல்லா மக்களிடையும் செயல்முறைக்கு வந்தன.

இந்த மறையோதிகள் மக்களை அடக்குவதில் வேற்று ஆட்சியாளர்களுக்கு உதவுபவர்களாக மாறினர், எனவேதான் மொகலாய அரசின் 700 ஆண்டு வல்லாண்மைக் காலத்தில் பார்ப்பனர்கள் செழித்து வாழ்ந்து தங்கள் உயர்நிலையை எங்கும் நிறுவிக் கொண்டனர். மக்களைச் சுரண்டுதல், அடக்குதல் ஆகியவற்றை ஒரே குறிக்கோளாகக் கொண்ட இந்த மதக்குருக்களின் தன்னுண்மை தான் இந்த நாட்டின் எல்லாத் தோல்விகளுக்கும் தீமைகளுக்கும் பொறுப்பான கரணியமாயிற்று.

மாபாரதம் என்பது ஒரு பார்ப்பனனால் தலைமை தாங்கப்பட்ட மதக்குருக்கள் கூட்டத்துக்கும் கண்ணனால் தலைமை தாங்கப்பட்ட உள்நாட்டுக் கூட்டத்துக்கும் இடையே நடந்த இறுதிப் போராட்டத்தை வரணிக்கும் ஒரு பாவியமாகும். உள்நாட்டுக் கூட்டந்தான் வெற்றியடைந்தது. அதில் இறப்பையும் இன்னலையும் எதிரிட்டவர்கள் மன்னர்களும் மக்களுமேயாவர். மதக்குருக்கள் எதையுமே இழக்க வில்லை.

கண்ணனுக்குப்பின் சில ஆண்டுகளில் உள்நாட்டு மன்னர்களின் முதன்மை மறைந்தது. பெருமன்னர்கள் அனைவரும் இறந்துவிடவே மிகச் சிலரே பார்ப்பனக் கூட்டத்தை எதிர்ப்பதற்கு இருந்தார்கள். மதக்குருக்களின் ஆளுகையின் முகாமைக் குணங்களாவன:

1. பார்ப்பனர் தாம் நாட்டிலேயே மிக உயர்வானவர்கள். அவர்கள் மற்ற அனைவரையும்விட வேறுபாடானவர்கள்.

2. அரசுபுரிபவர்கள் கூட பார்ப்பனரின் கருத்துகளைக் கேட்டே யாக வேண்டும்.

3. மிக உயர்ந்த கல்வியைக் கற்றறிவதற்கும் கற்பிப்பதற்கும், காவுகொடுக்கவும் பார்ப்பனர் மாத்திரமே தகுதியுள்ளவர்கள்.

4. மற்ற எந்த மக்களோடும் ஒப்புமை கொள்ளாத ஒரு தனிக் குலமாகப் பார்ப்பனர்கள் கருதப்பட்டார்கள்.

5. மதம் பார்ப்பனரின் ஒரு மறைவடக்கத்துறையாகக் கருதப் பட்டது.

6. நாட்டின் பொதுவான சட்டம் பார்ப்பனர்களைத் தாக்காது. ஆகவே நடைமுறையில் அவர்கள் மற்ற மக்களை ஒடுக்குவதிலும் சுரண்டுவதிலுமே அக்கறையுள்ள ஒரு தனி இனமாக மாறினர். அவர்கள் நாடெங்கும் பரவி, பணியக் கூடிய அரசர்களின் உதவி யுடன் தங்கள் உரிமைகளை நடைமுறைப் படுத்தினர்.

300 ஆண்டுகள் இந்தியாவிற்குள் ஒரு இருண்ட காலமே நிலவியது. பார்ப்பன அட்டூழியங்கள் எட்டுத் திக்கிலும் பரவின. வெகுவிரைவில் புத்தரின் சாய்காலோடு பார்ப்பனக் குமுகாயத்திற்குப் பேரெதிர்ப்பு ஏற்பட்டது.

1. 'வேதங்கள்', 'உபநிடதங்கள்', 'கீதை' மற்றும் மதக்குருக்கள் அல்லாதாரால் எழுதப்பட்ட 'ஆகமங்கள்' குலமுறையையோ, உருவ வணக்கத்தையோ, மத மரபுகளையோ ஏற்கவில்லை என்பதை நாம் முதன்மையாக மனதில் கொள்ள வேண்டும்.

2. உண்மை என்னவெனில் குலம், உருவ வழிபாடு, பார்ப்பனர் ஆளுகை, மதக்குருத்தன்மை இன்னும் இந்துமதம் என்ற பெயரால் அறியப்படும் பற்பல பழக்கங்கள், பார்ப்பனர்களால் எழுதப்பட்ட நூற்களால் மாத்திரமே பரப்பப்பட்டும், கடைப் பிடிக்கப்பட்டும் வருகின்றன என்பதே யாகும். இவையெல்லாவற்றின் குறிக்கோளும் பார்ப்பனர் உயர்நிலையை நிலை நிறுத்துவதும், மற்ற அனைவரையும் அடிமைப் படுத்துவதுமே யாகும்.

மாபாரதப் போர் தொடர்ந்த 300 ஆண்டுகள் இந்திய வரலாற்றில் ஒரு இருண்ட காலமாகும். இந்தக் காலக் கட்டத்திற்குள் மதக்குருக்கள் பல வெற்றிகள் பெற்று இந்திய மக்கள் மீது தங்கள் உயர்நிலையை நிலை நாட்டினர்.

1. தேயம் நூற்றுக்கணக்கான சிறு நாடுகளாகவும் தனித்தனிப் பழங்குடிகளாகவும் சிதைய நேரிட்டது. இவற்றிற்கிடையே அடிக்கடி பூசல்களும், கலவரங்களும் எழலாயின.

2. பார்ப்பனர்கள் அரசர்களின் இன்றியமையா அமைச்சர் களாகவும், மதக்குருக்களாகவும் மக்களின் அறிவுத் தலைவர்களாகவும் ஆகிவிட்டனர். ஆகவே அவர்களின் சாய்காலும், அதிகாரமும் மிகுதி யாக இருந்தன.

3. அவர்கள் குலச்சட்டங்களை விரிவாக்கவும் நிலைநிறுத்தவும் செய்தனர். இந்தச் சட்டங்கள் அரசர்களின் உதவியோடு நடை- முறைப்படுத்தப்பட்டன.

4. இந்திய ஆரியர்கள், 'பிராமணர்கள்', 'சத்திரியர்கள்', 'வைசியர்கள்' என மூவகையாகப் பிரிக்கப்பட்டனர். மற்ற இந்தியர் களனைவரும் 'சூத்திரர்'களாகக் கருதப்பட்டனர். அவர்களுக்குப் பார்ப்பன இனத்தில் இடமில்லை. நடைமுறையில் அவர்கள் அடிமை களாகவே நடத்தப்பட்டனர்.

5. எல்லா மதமும் கல்வியும் பார்ப்பனர்களின் ஒரு போக்காக மாறின. மற்றவர்கள் அவற்றிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

6. அரத்தக்காவுகள் பேரன்பளிப்புகள் பார்ப்பனர்களுக்கு வழங்கப்பட்டன.

7. அரசர்கள், பணக்காரர்கள், பார்ப்பனர்கள் பல பெண்களை மணந்தனர். எல்லாவகை ஊனையும் தின்றனர். சோமா என்னும் கள்ளைத் தாராளமாக அருந்தினர்.

8. பொது மற்றும் குற்றப்பிரிவுச் சட்டங்கள் இந்திய மக்கள் மீது இரக்கமற்ற கொடுமையுடன் நடைமுறைப்படுத்தப் பட்டன.

9. அடிமைமுறை இயல்பாக இருந்தது. பெண் அடிமைகளும் பொதுச் சந்தையில் விற்கப்பட்டனர்.

10. நாடு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. வடபகுதி யாகிய 'ஆரியவர்த்தம்' மிகவும் தூய்மையானதாகக் கருதப்பட்டது. தெற்குப்பகுதி குறைந்த தூய்மையுள்ளதாகவும், நடுப்பகுதி நடுத்தர தூய்மையுள்ளதாகவும் கருதப்பட்டன. அயல்நாடு செல்வோன் காவு கொடுத்தும் மரபுச்செயல்கள் நடத்தியும் தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

பார்ப்பனர்கள் மற்ற அனைவரையும் அடிமைப் படுத்துவதும், சுரண்டுவதும், அவர்களைப் பிளவுப்படுத்திப் பணியவைத்து அறியா மையில் உழல வைப்பதுவுமே தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இந்தியாவின் ஆயிரக்கணக்கான பழங்குடிகளின் எல்லாக் கடவுள்களும் பார்ப்பனர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

(தொடரும்)

ஈரங்கொள் தமிழ்போல் அவன்புகழ் என்றும் இருப்பதுவே!

சிங்கை மலையகத் தமிழரை ஒன்றாய்ச் சேர்த்திணைத்துத்
தங்கள் மொழி,இன உணர்வினை ஊட்டித் தமிழ்வளர்த்துச்
செங்கதி ரோடும் நிலவொடும் விண்மீன் செறிவொடும்போய்த்
தங்குதல் கொண்டான் சாரங்க பாணியென் தலைமகனே!

இன்பத் தமிழ்மொழிக் கிராப்பகல் தன்னை ஈந்துயர்ந்தோன்!
அன்புத் தமிழினம் உயர்ந்திட என்றும் ஆர்ந்திருந்தோன்!
என்புத் தசைநார் குருதியெல் லாமும் இனிதளித்துத்
தன்புத் துயிரையும் தந்தான் தன்னினம் தழைப்பதற்கே!

மொய்ம்புத் தமிழ்க்கே தாளிகை தோற்றி முரசறைந்து
நொய்ம்புத் தமிழரைத் திண்ணிய ராக்கி நொடிவகற்றச்
செய்ம்புத் திளையவன் போல உழைத்த செம்மலவன்!
அய்ம்பத் தாண்டுக் காலமென் னினத்தை ஆண்டவனே!

கல்குலைந் துருகிக் கலங்கினும் கலங்காக் கடமையினோன்!
சொல்குலைந் துரையா-வினைகுலைந் தியற்றாச் சோர்வறியான்!
பல்கலை தேரும் மாணவர் பயிலப் பைந்தமிழை
எல்கலை ஞாயிறாய் ஏற்றிய திறலோன்; இணையிலனே!

யாரெங்கு முள்ள தமிழரின் இனத்தைப் பராவிடுவோர்,
சாரங்க பாணியென் தலைவனை ஓர்க! சார்ந்திடுக!
வீரங்கொள் அன்னவன் வினையினைப் போலும் வினைவிளைக்க!
ஈரங்கொள் தமிழ்போல் அவன்புகழ் என்றும் இருப்பதுவே!

(மலையகச் செலவு மேற்கொண்டிருக்கும் தென்மொழி ஆசிரியர் பாவலரேறு. திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் சிங்கைத் தமிழ்முரசு ஆசிரியர் தமிழவேள் திரு. கோ. சாரங்கபாணி அவர்களின் மறைவு குறித்துப் பாடிய இரங்கற் பா.)

தமிழவேள் பிரிவு.

இடஞ்சிறி தென்னும் ஊக்கந் துரப்பக்
கடன்மேற் சென்று மலையகம் புகினும்
மலையப் பல்கலைக் கழகத் தெந்தமிழ்
நிலைபெற் றுயரவும் நீணிலம் போற்றவும்
தகுவினை யாற்றி மிகுபுகழ் கொண்டனன்
உகுவாய்க் களிறு பிளிறி யாஅங்குத்

தமிழ்முர சறைந்தனன் பெரிதே! அன்றியும்
இமிழ்கடன் முழக்கிற் றமிழர் கலிகொளத்
திருவிழ வெடுத்தனன் இனிதே! மற்றும்
பெருகுறு மெம்மவர் பீடுற முனைந்தே
ஓவா வினைபல உஞற்றினன் முன்னி
ஆவா இவன்றிறம் நாவாற் போமோ
நீர்வார் கண்ணேம் கையறச்
சீர்சால் தமிழவேள் பிரிவுற் றனனே!

திணை: பொதுவியல். துறை: கையறுநிலை.

சிங்கைத் தமிழவேள் திரு. கோ. சாரங்கபாணியார் மறைவு குறித்துப் புலவர் இறைக்குருவனார் பாடியது.

தமிழவேள். திரு. கோ. சாரங்கபாணி மறைவு.

சிங்கப்பூர் தமிழர் தலைவரும், தமிழ்முரசு (நாளிதழ்) ஆசிரியரும், ஏறத்தாழ அரைநூற்றாண்டுக் காலம் மலைநாட்டுத் தமிழர் முன்னேற்றத்திற்கும் உரிமைக்கும் அரும்பாடு பட்டவரும் ஆகிய தமிழவேள் திரு. கோ. சாரங்கபாணி அவர்கள் தி.பி 2005. மீனம். 3 (16—3—74) காரிக்கிழமை யன்று இயற்கை யெய்தியமை அறிந்து பெரிதும் வருந்துகின்றோம். அவர்தம் மறைவு மலையா சிங்கைத் தமிழர்க்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவர் பிரிவால் வருந்தும் குடும்பத்தார்க்கும் மற்றும் தமிழர்க்கும் 'தென்மொழி' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

—அமைச்சர், தென்மொழி.

'தென்மொழி'

கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா	10-50 உருபா	14 உருபா
அரையாண்டுக்கட்டணம்:	5 உருபா	6 உருபா	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	1-10

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

'விடுதலை இயக்கத்தில் விரைந்திணைக!

—செந்தமிழ வேங்கை.

அருமைத் தமிழ்நிலம் அயலவர் ஆண்டிட
அடிமை யுற்றிங் கமைந்திடவோ?
பெருமை யுடைகுடி பின்னே யிருந்திட
பீடில் குடிகள் சிறந்திடவோ?
ஒருமை யெலாம்பேசி உருப்படோம் இனியேனும்
உயரும் வழியினை நாடிடுவோம்
வீருப்பாய் தமிழரே! விழித்துத் 'தமிழக
விடுதலை யியக்க'த்தில் விரைந்திணைக!

நட்ட பயிர்க்கே நலிவைத் தருதலால்
நாமும் களைகளை நீக்குதல்போல்
ஒட்ட நறுக்குவோம் ஆரியர் வால்களை
ஓட்டமெடுத்தே யகன்றிடுவர்.
கெட்ட தமிழ்க்குடி கிளைத்திட வேண்டிநீர்
கேளிக்கை விட்டிங்கே வந்திடுவீர்!
விட்ட தனைத்தையும் வென்றிடத் 'தமிழக
விடுதலை யியக்க'த்தில் விரைந்திடுக!

கொடுதலை யென்றாலே கொள்ளுக பலவெனும்
கொள்கை யுளங்கொளும் மறவர்களே!
அடுதலை யன்றியே அயலவர் தம்மிடம்
அடைவதொன் றில்லை யறிந்தமையால்
விடுதலை யொன்றே விடிவினுக் குதவும்
விளைவினைக் காணத் துடிதிடுவார்
சடுதியாய் வந்து சளைக்காது 'தமிழக
விடுதலை யியக்க'த்தில் தளைந்திடுகே!

உற்ற பழியெலாம் ஒழித்தே வுலகினில்
உண்மையை நாட்ட வுழைப்பாரெலாம்
முற்றத் தமிழினம் முகிழ்த்தே நாட்டினில்
முடிவினைக் காணத் துடிப்பாரெலாம்
கற்ற பெருங்கல்வி கலைகள் பெருக்கத்தால்
கனக்கும் பொய்மையைக் கடிவாரெலாம்
விற்ற பெருமையை மீட்கத் 'தமிழக
விடுதலை யியக்க'த்தில் ஒன்றிணைக!

கொற்கை.

சின்னத்தம்பி,
திருவிலங்கை முன்னுள் அளவைத் துணைத் தலைவர்.
(Formerly Deputy Surveyor General, Ceylon.)

எரதோத்தசு (Herodotus), தாலமி (Ptolemy) போன்ற வரலாற்று, நிலநூல் அறிஞர்களால் பழம் வரலாற்று நில நூல்களுள் கோல்சிசு (Colchis)[1] எனக் குறிக்கப் பெறும் 'கொற்கை' என்னும் சொல், சில வரலாற்று நிலநூல் சிக்கல்களைத் தெளிவிப்பதற்கான அரிய குறிப்புகளைக் கொண்டிருப்பதாகத் தோற்றுகிறது.

இந்தச் சொல், எரதோத்தசுவின் வரலாற்று நூல்களிலும் அன்றறிந்த உலகத்தைப் பற்றிய தாலமியின் நிலநூலிலும் பயன் படுத்தப் பெற்றுள்ளது. இந்தச் சொல்லும், ஓர் ஆற்றின் பெயரான பெசிசு (Phesis) என்ற இன்னொரு சொல்லும் கருங்கடற் பகுதியிலும் மன்னார்குடாப் பகுதியிலும் வழங்குவது தனித்த கவனத்தை ஈர்க்கிறது.[2]

இச் சொல்லை, கால்டுவெல் (Caldwell) இக்கட்டுரையின் நிரலே காணுமாறு, படைவீட்டைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லெனத் தடம் காட்டுகிறார்.

இச் சொல்லின் பல்வகைத் திரிபு வடிவுகள், படையிருப்புகளால் உருவான குடியிருப்புகள் உள்ள குடாக்கள், நகர்கள், அவற்றிலுள்ள மக்கள் முதலியவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்றதாகத் தெரிகிறது.

மொழியாக்குநர் குறிப்பு:

1. 'கொற்கை-Colchis. காண்க: தொண்டி-Tundis;
முசிறி-Muziris.
[Periplus of the Erythrean Sea]

2. 'இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்த மக்கள் இங்கிலாந்திலுள்ள தம் ஊர்ப்பெயரையே அமெரிக்காவில் தாம் நிலைபெற்ற இடங்களுக்கும் சூட்டியதை (நியூ யார்க், நியூ செர்சி,...) ஒப்ப அடுத்தடுத்த கடற்கோளால் குடிபெயர்ந்த குமரிக்கண்ட மக்கள், தாம் குடியேறிய நாடுகளிலும் தம் ஊர்ப் பெயரை [ஊர் (ur), மீன்னெட்டான புரி (Edin BURGH ek), செப்பறை (Cyprus)] இட்டு வழங்கினர்' என்ற கருத்து கவனிக்கத் தக்கது.

எகிபதிய மன்னரால் (Egyptian king) கருங்கடற் பகுதிக்குக் கொணரப் பட்டதாகக் கருதப்பெறும் மக்களை எரதோத்தசு கொற்கையன்(கள்) [Colchian(s)] எனக் குறிக்கிறுர்.[3]

இச் சொல், தாலமியின் நிலநூலுள் மன்ஞர்குடாவின் மூத்தள மாகவும் கொல்சியசு சைனசு (Colchius Sinus) என்னும் பெயரின தாகவும் விளக்கப் பெறும் குடா, அதனைச் சார்ந்த இந்திய (தமிழ் நாட்டு) நகரை இரண்டையும் சுட்டும் கொற்கையைக் குறிப்பதாகத் தோற்றுகிறது.

கால்டுவெல் இச்சொல்லைப் பகுப்பது கவனிக்கத் தக்கது. அவர் கருத்துப்படி, கொல்சிசு (Kolchis-Colchis) என்பது படைத் துறை யெனப் பொருள்தரும் இந்திய நகரான கொற்கையே யாம். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற தமது பொத்தகத்தில் அவர் இதனைக் குறித்திருக்கிறுர். இதனைக் 'கடந்த காலத் திருவிலங்கை' (Ceylon in retrospect) என்ற என்றன் எழுத் தோவியத்தில் விரிவாக ஆய்ந்துள்ளேன்:

அவர் (கால்டுவெல்), தாலமியாலும், கடற்செலவுக் காதை யிலும் (Periplus) இந்த இடம் கூறப் பெற்றிருப்பதையும்; பியூட்டிங்கர் அட்டவணையுள் (Peutinger taples) சுட்டப்பட்ட மிகச் சில இடங்களுள் கொல்சிசு இந்தோரம் (Colchis Indorum) என வழங்கப்பட்ட இஃது ஒன்றென்றும்; இக்கிரேக்கப் பெயருடன் தமிழ் இடப்பெயரான 'கொற்கை' ஏறத்தாழ முற்றுெத்திருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் இதனை கொல்+கை எனப் பகுத்து, கொலைக் (களக்)கை எனப் பொருள்படும் கொற்கை, படை அல்லது பாடிவீட்டைச் சுட்டும் பாவியச் சொல் (Poetical term) எனக் கண்டறிந்தார். மேலும் அவர், இப்பெயர் குறித்த இரு சொற்களைப் பொறுத்த மட்டிலாவது அந்நாளில் இருந்து இந்நாள் வரை தமிழ் மொழி, சிறு மாற்றமேனும் பெற்றதாகத் தெரியவில்லை எனவும் கூறுகிறுர்.

இந்தியாவுக்கான பேரரசுக் களஞ்சிய வெளியீட்டில் (Imperial Gazetteer of India) உள்ள கீழ்க்கண்ட பகுதி இந்த இடத்தில் மிகப் பொருத்தமாகவும் கவனத்துக் குரியதாகவும் இலங்கு கிறது.

---

3. *எகிபதிய அரசி ஒருத்தி, 'குமரிநாட்டிலிருந்து வந்த பாண்டியர் வழியினள்' என தன்னைக் கல்வெட்டிற் குறித்துக் கொண்ட மையும் இதனை வலியுறுத்தும்.*

இம்மாவட்டத்தின் பெருநகரங்கள் பலவும் தாமிரவரணியின் கரையிலேயே அமைந்துள்ளன. திராவிட நாகரிகத்தின் முந்தை யிருப்பிடமாகவும், ஒரு காலத்தில் புகழ்மிக்க கடற்றுறையாகவும் பாண்டியரின் முதற் கோநகராகவும் விளங்கிய கொற்கை, இவ் வாற்றின் கழிமுகத்தில் அமைந்துள்ளது. ஆற்றின் வண்டற் படிவால் இதன் கடற்றுறைப் பணி தூர்க்கப்பட்டு, கரையிலிருந்து 5 கல் (8 அயர்மாத்திரை) தொலைவுக்கு அகன்று விட்டது. பின் மார்க்கோ போலோ வந்திறங்கிய காயல் இதன் இடத்தை ஏற்றது. இதுவும் வண்டலிடைப் படவே, போர்த்துக்கீசியர் தூத்துக்குடியை இக்கடற் கரைப் பகுதியின் கோத்துறையாக அமைத்தனர். தாமிரவரணியின் நுழைவாயிலுக்கு (கழிமுகத்துக்கு) அப்பால் நிகழும் முத்துக் குளித் தலும் சங்கெடுத்தலும் தமிழ் இலக்கியங்களில் அடிக்கடி குறித்துள்ள வாறு, ஒரு காலத்தில் மிகப் புகழ் பெற்றிருந்தன.

முத்துக் குளிப்பிடங்களில் கட்டாய நிலைப்படை நிறுத்தப் பட்டிருத்தல் வேண்டும். எனவே தான் இம்முத்துக் குளிப்பீடங்களில் குற்றவாளிகளைப் பாண்டியர் அமர்த்தும் வழக்கம் இருந்து வந்தது. போர்த்துக்கீசிய வரலாற்றுசிரியர்களின் கூற்றுப்படி, போர்த்துக்கல் சிறைகளைக் காலிசெய்து, தம் வாழ்வின் எஞ்சிய பகுதியோ இல்லெனின் ஆண்டுக் கணக்கிலோ சிறையுள் நலிவுறுவதைவிட, அயல் தட்பவெப்ப நிலையிலும் அறியாத நிலப்பகுதியிலும் தமது உரிமையை எதிர்கொள்வதை விரும்பியேற்ற ஒறுப்புக் குற்றவாளி களால் உருவான படையே, உண்மையில், கொற்கைக் குடா, இலங்கை, இந்தியாவுக்கு வந்த முதல் ஐரோப்பியப் படையாகும்.

எர்தோத்தசுவின் இச் சொல்லாட்சியைப் பின்னேக்க, எகிபதிய அரசன் செசோத்திரிசு (Sesostris) தன் படைவெற்றி களால் இம் முத்துக் குளிப்பிடங்களையும் உள்ளடக்கினன் என்பது முடியாததொன்றன்று. முற்குறித்த எனது கட்டுரையில் இப்புதிரும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதிற் குறித்துள்ளேன்: எகிபதி-யருக்கும் கொற்கையருக்கும் இடையேயான தொடர்பை எரதோத்தசு தெளிவாக வலியுறுத்துகிறர்; இதிற் குறிப்பிடத் தக்க முதன்மை என்னவென்றல், காக்காசியப் பகுதியிலும் (Caucasus) மன்தாரியசு (Man Darius) நெடுகிலும் கொற்கையப் படையை வைத்தகன்ற செசோத்திரிசுவின் வெற்றிகளை எரதோத்தசு வலியுறுத்துவதே. இது, தாலமியின் இலங்கை காக்காசியாவுக்கான தேசப்படத்தில் தீட்டப்பட்டவாறு, வடமேற்

கிலங்கையில் பாசிசு ஆறு வரைப்பட்ட பகுதியையும், தென்னிந்தியாவுக்கும் வடமேற்கிலங்கைக்கும் இடைப்பட்ட கொற்கைக் குடாவையும் செசோத்திரிசு தன் படைவெற்றிகளுள்ளடக்கி யிருத்தலும் கூடும் என்பதை உணர்த்துகிறது.

எரதோத்தசுவின் மேற்குறித்த நோக்கில் இருந்து இக்கருத்து உறுதி பெறுவதாகத் தோற்றுகிறது; அவர் சொல்கிறார்:

இவ்வரசர்...அரேபியக் குடாவிலிருந்து கிளம்பி அவரது நாவாய்கள் கடக்க யியலாத மேட்டுப் பகுதிக் கடல் வரையிலும் சென்றார். செங்கடல் வரையுள்ள அனைவரையும் அடிப்படுத்தினர். அங்கிருந்து எகிபதுக்குத் திரும்பிய பின் தலைநிலப் பரப்பின் மீது படையெடுத்தார்.

அந்நாளில் அறியப்பெற்ற செங்கடல், ஏடன் உடன் முடிவுற வில்லை. மாறாக இந்தியக் கரைவரை பரவியிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. இலாகோவரி (Lahovary)யின் கூற்றினின்றும் இஃது உய்த்துணரப் பெறும்:

கிரேக்கருக்குச் செங்கடல் அல்லது அரத்தக்கடல்[4] (Erythree Thalassa) என்பது ஏடன் உடன் முடிவுறவில்லை; ஆயின் இந்தியக் கரையை எட்டியிருந்தது என இச் ஆட்ரன் (Ch Autran) மேலும் குறிப்பிடுகிறார். இதனை, ஏடன் வளைகுடாவைச் செங்கடல் என்றும், இன்றையச் செங்கடலை அராபிய வளைகுடா என்றும் விளக்கும் தாலமியின் நிலநூலும் உறுதிப்படுத்துகிறது. ஒரோசியசு (Orosius) நிலநூலும் கூட இதனையே வலியுறுத்துகிறது.

தென்னிந்தியாவுக்கும் வடமேற்கிலங்கைக்கும் இடைப்பட்ட முத்துக்குளிப்பு நடக்கும் மன்னார் வளைகுடா ஆழமற்ற கடற் பகுதி யாதலால், 'ஆழம் குறைந்த கடல்' என்ற தொடர் கவனிக்கத் தக்கது. இந்த ஆழம் குறைந்த கடலைப்பற்றி இலங்கையைப் பற்றிய தமது பொத்தகத்தில் இரீபீரோ (Ribeiro) கூறுகிறார்:

முத்தள நெய்தல் என்னும் கரையோரப் பகுதி சீலோ (Cellao) வுக்கும் தலைநிலத்துக்கும் இடையில் ஆட்ரியாட்டிக் (Adriatic) கை ஒத்த ஒரு வளைகுடாவை உருவாக்கி, குமரி முனையிலிருந்து உள்

4. *தமிழ்: அரத்தம்*-GK: erythros

நோக்கிச் செல்கிறது. இதன் நீளம் 57 லீகு;[5] அகலம் 36 லீகு இதன் நடுவிடம் இராமனேசர் (Ramonecer) மன்னார் தீவுகள். இத் தீவுகளுக் கிடையே 12 லீகு தொலைவுக்கு மணற்கரையான வளைகுடா நீள்கிறது. இராமனேசர், மன்னார் என்னும் இரு குறுங் கால்வாய் தவிர்த்து வேறு வழியில் சோழ மண்டிலக் (Coromandel) கடற் கரைக்குச் செல்ல இயலாது. இவ்விரு வழிகளிலும் கடல்நீர் ஏற்றத் தின் போது மட்டுமே சிறுமரக்கலங்கள் செல்லற்கியலும்.

இலாகோவரி, காக்காசியப் பகுதிக் கொற்கை மக்கள் ஈட்டத்தைப் 'படைக்குடியிருப்பு' எனச் சுட்டிய கவனிக்கத்தக்க குறிப்பையும் நான் கூறியாக வேண்டும். திராவிடர் தோற் றமும் மேலைநாடுகளும் (Dravidian Origin and the west) என்ற தமது நூலுள் அவர் கூறுகிறார்:

எரதோத்தசு கூறுமாறு, எகிபதியர் காக்காசியக் கொற்கை மக்களுக்கும் தங்களுக்கும் மிகுந்த பொதுத் தன்மை காணப்படுவதாக நினைத்து 'உண்மையில் என்றும் நிலவாத' செசோத்திரிசுப் படைக்குடியிருப்பின் பிறங்கடை (வழிவந்தவர்கள்) எனத் தம்மைக் கருதினர்.[6]

கொற்கையை, படையுடன் அஃதாவது படைக் குடியிருப்புடன் தெளிவாகத் தெரிவுபடுத்தியதிலிருந்து எரதோத்தசும் எகிபதியரும் கூறுவன சரியே எனத் தோற்றுகிறது. இங்கும் எரதோத்தசு மீண்டும் மெய்ப்பிக்கப் படுகிறார்.

கால்டுவெல்லின் கொற்கை யிடஞ்சுட்டல், ஓர் இளவரசிக்காக மதுரைக்கு விசயா (இலங்கைக்கோ) விடுத்த தூதுவர் பற்றிய குறிப்பு விளைத்த குழப்பத்தைத் தெளிவிக்கவும் உதவுகிறது. மகாவம்சம், மதுரையைத் தென்னிந்தியாவில் உள்ள மதுரை எனத் தெளிவாகக் குறிக்கிறது; ஆனால் தூதுவர்கள் நாவாய்களில் அவ்விடத்தை அடைந்தனர் என்கிறது. எனவே, பாண்டியர் கோநகர் (மகாவம்சம் எழுதப்பெற்ற கி.பி 5 ஆம் நூற்றாண்டு 'மதுரை') உண்மையில் வண்டல் படிவதற்கு முன் விளங்கிய கொற்கையே எனத் தெளிவாகிறது[7].

5. லீகு (League) - கடல் தொலைவளவை.
1லீகு $= 1.376$ ஆங்கிலக்கல் $= 2.2016$ அயிர்மாத்திரை (Km)
57 லீகு $= 125\frac{1}{2}$ அ.மா; 36லீகு $= 79\frac{1}{4}$ அ.மா;
12லீகு $= 26\frac{1}{2}$ அ.மா;

6. அடிக்குறிப்பு 2-ஐக் காண்க.

7. 'அக்காலத் தமிழரசர் மருதத்தலைநகர் நெய்தற்றலைநகர் என இரு கோநகரைக் கொண்டிருந்தமைக் கொப்ப பாண்டியன் மருதத் தலைநகராக மதுரையையும் நெய்தற் றலைநகராகக் கொற்கையையும் கொண்டிருந்தான். இளவரசருக்கு ஆட்சிப்

தாலமியின் நிலநூல், மதுரையை, பாண்டிய அரைய மதுரை (Madwa Regia Pandionis) எனத் தெளிவாக வரணிக்கிறது. இது அந்த இளவரசி கிளம்பிய இடம் தென்னிந்தியாவே என்பதையும், இத்துடன் கூட மகாவம்சத்தின் நிலநூல் துல்லியத்தை நிறுவும் துணைச் சான்றையும் தருகிறது.

அநுநாதபுரத்துக்கும் மதுரைக்கும் விசயா காலத்திலிருந்த இம் முந்தைத் தொடர்பு பெர்ணுண்டோ கூறுவதிலிருந்தும் புலனாகும்:

தென்னிந்தியாவில் ...... பாண்டிய நாட்டின் ஈர்க்கத்தக்க பிராமிப் பதிவுகள் (Brahmirecords), இலங்கையின் பழம் பிராமிப் பதிவுகளுக்கு நெருங்கிணையாக உள்ளன. இவ்வாறே, மிகிந்தேல் (Mihintale), வெசகிரியா (Vessagiria) போன்ற பழம் இடங்களில் உள்ளனவும் ஒத்துள்ளன. அத்தோடு மிகிந்தேல், வெசகிரியாவில் கற்படுக்கைகளும் ஒத்துள்ளன.

கி. பி. முதல் இரண்டு நூற்றுண்டுக் காலத்ததெனும் தொடக்கக் குகைப்பதிவுப் பிராமியும் அரிக்கமேட்டுப் பொறிப்புகளும் (பதிவு எழுத்து) ஒருவகையாய் உள்ளன. இலங்கையிலும் இந்தியாவிலும் செதுக்கெழுத்தர்கள் ஒரே வகையினராயினும், இலங்கை, இந்தியாவின் (அஃதாவது தமிழகத்தின்) செதுக்கெழுத்தர்கள் அசோகரின் பதிவுகளைச் செதுக்கியவரினின்றும் வேறுபட்டவர்கள். இலங்கையிலும் இந்தியாவிலும் (அஃதாவது தமிழகத்தில்) நிலவிய இக்கலை அசோகருக்கு முன்பே இவ்விடங்களில் வழக்கில் இருந்தது[8].

நன்றி: Journal of Tamil Studies, Dec. 72.
தமிழாக்கம்: இல். க. இரத்தினவேல்.

பயிற்சி அளிக்க கொற்கை இளங்கோவின் முழுக் கண்காணிப்பில் விடப் பட்டிருந்தது' என்ற கருத்து நோக்கத் தக்கது. இத்தகைய அமைப்பைக் கைக்கொள்ளாததாலேயே வலிமை மிக்க பிற்றைத் திருமலை நாயக்கர் சேர பாண்டிய (பாதிச்) சோழ மண்டிலங்களை ஒரு சேர ஆண்டும், போர்த்துக்கீசியர் தச்சுக்காரர் போன்ற வெளிநாட்டார் தாக்குதலுக்குக் கிழக்குக் கரை தொடர்ந்து இலக்காகியது.

எனவே 'அலைகடல் நடுவுட் பலகலம் செலுத்தும்' பாண்டிய இளங்கோவால் பாதுகாக்கப் பெற்ற கொற்கையுடன் செசோத்திரிசு போரிட்டாரா அல்லது நட்புப் பாராட்டினரா என்பது ஆய்தற் குரியது.

8. *பெர்ணுண்டோவின் இவ்வாய்வுரை, 'அசோகர் கல்வெட்டுப் பிராமி எழுத்துகளில் இருந்தே தமிழ் எழுத்துகள் உருவாக்கப் பட்டன' என்பவர்களுக்குச் சரியான மறுப்பாகும்.*

பஞ்ச மரபு.

கடைக் கழகக்கால நூலே!

பேராசிரியர். **வீ. ப.கா. சொல்லழகனுர். க.மு.**

'பஞ்சமரபு' எனும் இனிய இசைநூல் அண்மையில் வெளி வந்துள்ளது; இது கடைக் கழகக்(சங்க) காலநூல். மிகுந்த செல்வாக்குப் பெற்றுப் பெரிதும் பரவியிருந்ததால் இறையருளால் இன்று நமக்குக் கிட்டியுள்ளது. பஞ்சமரபு அடியார்க்கு நல்லா ரால் பெரிதும் பாராட்டப்பெற்றது. அடியார்க்கு நல்லார் இந்நூலின் துணைக் கொண்டும் பிற நான்கு நூல்களின் துணைக்கொண்டும் சிலப்பதிகார இசை நுணுக்கச் செய்திகளைப் பெரிதும் விளக்கு கின்ருர். சிலம்பில் காணப் பெறும் இசை இலக்கணத்திற்கும் பஞ்ச மரபின் இசை இலக்கணத்திற்கும் பெரிதும் ஒப்புமை உள்ளது. எனவே, **'பஞ்ச மரபு'** மிகப் பழைய மரபு. அதில் காணப்படும் இசை மரபு–சிலம்புக் காலத்திற்கு முன்பிருந்தே வழி வழியாக வரும் வளமிக்க மரபு என்பதைச் சிலம்பையும் பஞ்சமரபையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தப்பின்றி அறியலாம். அதுபற்றி நெடுங்கட்டுரை பின்னர் வரைவாம். அடியார்க்கு நல்லார் பஞ்சமரபு நூலின் வெண்–பாக்கள் முப்பதைக் குறிப்பிடுகின்ருர்; ஆங்காங்கு மேற்கோள் காட்டி இசை இலக்கணத்தை விளக்குகின்ருர். எனவே பஞ்சமரபின் செல்வாக்கும் சிறப்பும் வழங்கிய காலப்பரப்பும் இதனுல் எவரும் அறியலாகும்.

நூல் வெளியீட்டாளர்: வேலம்பாளையம் இரா. **தெய்வ சிகாமணிப் புலவர்** பல முறை பல சமய நூல்களை–மிகப் பழைய நூல்களை வெளியிட்ட ஒளிமிக்க உயர் தமிழ்ப்பற்றுளர். அவரே இந்நூலைப் பதிப்பித்தார். உள்ளற்குரிய பொள்ளாச்சிவள்ளல் **நா. மகாலிங்கரும்** பண்ணுய்வு அண்ணல் **ப. சுந்தரேசரும்** முறையே இயக்கப் பொருளியல் விளக்கக் குறிப்பியல் துறைகளில் உழைத்து நிறைநல நூலை குறையற வெளியிட்டுள்ளனர். இம் மூவர்க்கும் தமிழிசையுலகு அமிழ்தென உவந்து நன்று ஆர்ந்து நன்றி கூறும்.

பெயர்: "பஞ்ச மரபு"— நரம்பு, குழல், குரல், தோல், கூத்து என ஐந்து மரபு கூறுவதால் இப்பெயர் பெற்றது. 'நரம்பு' —யாழ், கின்னரம் முதலிய கருவிகள்; 'குரல்'–வாய்ப்பாட்டு; 'தோல்'–மத்தளம் முதலியன; 'கூத்து'–நாட்டியம். இவ்வைந்தும் வகுத்துப்

பிரித்து விளக்கிச் சொல்லப்பட்டுள்ளதால் 'பஞ்சமரபு' எனப்பட்டது. ஐந்தொகை எனும் மறுவற்ற மறுபெயருமுண்டு.

ஆசிரியர்: அடியார்க்கு நல்லாரே-கடலாடுகாதையுள் தம் உரையில், "செப்பரிய சிந்து" எனும் பஞ்சமரபுப் பாடலையும் கூறி இதன் ஆசிரியர் "அறிவனார்" என்றும் சுட்டுகின்றார். இவரது ஊர் "சேறை" என்பது.

பஞ்ச மரபின் காலம்: நூலின் தொடக்கம் யாழ் மரபு. இதன் முதல் செய்யுளிலேயே –"தார் பொலிந்த மன்னன் திருமாற" என்றும், "வண்கூடல் கோமானே" என்றும் முன்னிலைப்படுத்தி நன்னிலையாழ் இலக்கணம் கூறத் தொடங்குகின்றார் சேறை அறிவனார். இம்மதுரை மன்னன், இரண்டாம் கடல்கோள் காலத்தில் கபாடபுரம் விடுத்து, கரையை அடைந்து மதுரை அமைத்து, புலவர் கூடல் அமைத்து ஆண்டவன். எனவே 'வண் கூடல் கோமான்' எனப் போற்றப் படுகிறான். நூல் தொடக்கத்திலேயே நூலில் ஒன்பது இடங்களில் மதுரை மன்னன் போற்றப் பெற்றுள்ளான். அவனின் கடைக் கழகக் காலமே பஞ்சமரபின் காலம்; அவனின் காலம் கி.மு. முதல் நூற்றாண்டுக்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் என் சொல்லலாம்; சிறிது முன்பின் ஆகுக. கூடல் கோமான் திருமாறனைப் பற்றிய குறிப்பு, ஆடூஉ முன்னிலையாக மொத்தம் ஒன்பது இடங்களில் வந்துள்ளன:

1. மன்ன திருமாற!
2. வண்கூடற் கோமானே! (யாழ்மரபு)
3. மணிமாட மோங்கும் மதுரையார் கோவே!
(வகையொழிபு மரபு)
4. பொதியமலைத் தென்னன்.
5. புயல் தணித்த தீரா! (கடல் கோள் குறிப்பு)
6. திருமடந்தை மன்னா!
7. இந்து வழிவந்த மாற!
8. வழுதியார் கோவே!
9. நண்ணிய மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றார்க்கு
விண் கொடுத்த தென்னர் கோமானே! (கண்ட மரபு)

இனி, தினமணிச் சுடர் 30–12–73 செய்தி இதழில் வரலாற்று ஆராய்ச்சியாளர் மு. அருணாசலம் அவர்கள், பஞ்சமரபின் காலம்

கி. பி. 9. ஆம் நூற்றுண்டு என நிறுவுகின்ருர், "நிருபதுங்க ராகம்" என்று ஓர் இசையின் பெயர் பஞ்சமரபில் காணப்படுகிறது. எனவே, "நிருபதுங்கப்பல்லவவர்மன்" காலத்து நூல் என நிலை நாட்டினுர் இது பொருந்தாது:

1. கூடற்கோமானை ஒன்பது இடங்களில் நூலின் வெண்பாக் களில் சுட்டுகிருர் அறிவனுர். இந்நூல் வெண்பாவினுல் முழுதும் ஆக்கப்பட்டுள்ளது. ஆனுல் ஒரு வெண்பாவிலாகிலும் நிருபதுங்கவர்மனைச் சுட்டவில்லை.

2. மேலும், நிருபதுங்கராகம் என உரையாசிரியர் தான் உரை-யில் சுட்டுகிருர். நூலாசிரியர் தம் வெண்பாவில், அகநூலில் யாண்டும் நிருபதுங்கவர்மனை, வெளிவந்துள்ள வெண்பாக்களில் சுட்டவே இல்லை. ஆகையால் அவன் வழியாகக் காலம் எங்ஙனம் நிறுவ இயலும்?

3. மேலும் நிருபதுங்கராகம் என்பது தோடியைச் சுட்டும் என பண்ணுய்வு அறிஞர். ப. சுந்தரேசர் சுட்டுகினருர். இது (சுத்த) துங்கக் கோவைகளால் ஆக்கப்பட்ட பண் (குரல்), துத்தம், கைக்கிளை, உழை, விளி, தாரம் எனும் இசைக்கோவைகள் ஏறிய வகையின வல்ல; குறை கோவைகளே. இவற்றைச் 'சுத்த சுவரங்கள்' என்பர். சுத்தம்-துங்கம்; முழுதும் முதல்வகைக் கோவைகளாக (குறை நரம்பினவாக – கோமளசுவரங்களாக) இருப்பதால் இப்பெயர் பெற்றது.

4 பண்கள் பெயர் பெறும்போது பண்பு, வினை, பா, நிலம் என நால்வகையால் பெயர்பெறும் என அறிவனுரே கூறுகிருர். சிறப்பாக இவ்வகை கூறுங்கால் 'மதுரையார் கோவே' என முன்னிலைப் படுத்திக் கூறுகிருர். அந்நால்வகையொடு அரசர் பெயரால் பண் பெயர் பெறுமென ஐந்தாம் வகை கூறவில்லை. அதே செய்யுளில் மதுரையார்கோனையே விளியாக்கி விரிக்கின்ருர்.

5. உரையாசிரியர் காலம் மிகப் பிற்பட்டது, அவர் கூறுவன கொண்டு நூலாசிரியர் காலம் நிறுவுதல் கூடாது.

6. சாளரப் பாணி என ஒரு பண்ணை வைத்தும் காலம் கூறக் கூடாது, தேவாரத்தில் சாளரப்பாணி இல்லை என்ருல் என்ன? அனைத்துப் பண்களும் தேவாரத்தில் இடம் பெறவேண்டுமா? பண் வகை கூறும் பண் இலக்கண நூலா தேவாரம்? பண்பெயர் தோன்றும்-மறையும்-தோன்றும். நிலைப்பில்லாதனகொண்டு காலம் நிறுவுதல் கூடாது.

7. தொல்காப்பியத்தில் வெண்பா இலக்கணம் கூறப்பட்டுள்ளதால்- பஞ்சமரபு வெண்பாவால் இயற்றப்பட்டது. குறளில் இயற்றப்பட்ட வேறு நூலில்லாதது போல்- வெண்பாவால் இயற்றப்பட்ட வேறு நூலில்லை எனச் சொல்லலாம். வெண்பாவினால் இயற்றப்பட்டதனால் பிற்காலத்து நூல் என முடித்தல்-தொல்காப்பியத்தொடு பொருந்தாது.

அடியார்க்கு நல்லார் பஞ்சமரபுக் காலம் பற்றிக் கொண்ட கருத்தென்ன? அவர் கூறியது:- "இவ்வைந்து நூற்களும் (இசை நுணுக்கம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், கடைச் சங்க மீரிஇய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த மதிவாணனார் நாடகத் தமிழ்) நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்கள் அன்றேனும், ஒருபுடையொப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையென்க"-எனக் கூறியுள்ளார். அவர் கருத்தாவது இவ்வைந்தும் நாடக இலக்கணம் கூறிய நூல்கள் அல்ல. ஆயினும் பல செய்திகள் உரையெழுத ஒளிதருகின்றன என்றுதான் அடியார்க்கு நல்லார் கருத்துக் கொள்ளுகிறார். திரு. மு. அருணாசலர், 'அடியார்க்கு நல்லார்'-பஞ்சமரபைக் கடைக் கழகநூல் அன்று என்று கருதுவதாகக் கூறியது திரித்துக் கூறியதேயாகும். அடியார்க்கு நல்லார், நாடகத்திற்குரிய தனி இலக்கணநூல் கிடைக்கவில்லை என வருந்துகிறார்; அவ்வளவுதான். பஞ்சமரபு காலத்தால் பிற்பட்டது என்றோ, இசை மரபுத்துறைகளில் குறைபட்டது என்றோ கருதவில்லை. உண்மையில் பஞ்சமரபின்றேல் அவர் சிலம்புக்கு உரை எழுதியிருக்க முடியாது. முத்தான, முத்தாய்ப்பான முப்பது இடங்களில் பஞ்சமரபு வெண்பாக்களைப் பயன்படுத்தி சிலம்புரை நலம்பெற எழுதியுள்ளார்.

இதுகாறும் - பஞ்சமரபுக் காலம் கடைக்கழகக் காலமே என்றதற்குக் காட்டிய காரணங்கள் வருமாறு:- (1.) சிலம்புரை எழுத அடியார்க்கு நல்லார் பஞ்சமரபைப் பெரிதும் பயன்படுத்தியதாலும் (2) கூடற் கோமானை முன்னிலைப் படுத்தி நூலியலைத் தொடங்குவதாலும் (3) மதுரையார்கோனை 9 இடங்களில் நூலில் குறிப்பதாலும் (4) நூலில் இசைமரபுகள் மிகப் பழங்காலந்தொட்டு தொடர்ந்து வருவதாலும் (5) கடைக் கழகப் புலவர்களுள் ஒருவர் பெயர் "அறிவுடையனார்"-எனக் காணக்கிடப்பதால், அறிவுடை-யனார்-அறிவனாராகலாம் எனக் கருதற்கு இடம் உண்டு ஆதலாலும் (6) சிலப்பதிகாரத்திற்கு முன்னர் இருந்த இசைமரபுகளை பண்

அமைப்புகளை (கிரகபேதம் செய்து) கோவை வீடுகளை மாற்றிப் பண்ணமைக்கும் முறைகளை மிக விரிவாக விளக்குவதாலும் சிலப்பதிகாரக் காலத்திற்கும் முன்னர் இருந்த மரபு முறைகளைக் கூறும் நூல் எனத் தெளிவாகக் காட்டலாம்; கடைக்கால நூல் என உறுதியாக நாட்டலாம்.

வரலாற்றுப் பேராசிரியர். மு. அருணசலம் தினமணி (30—12—72) இதழில் காட்டிய காரணங்கள் ஒன்றேனும் பொருந்தவில்லை, ஆதலால் கி.பி. 9-ஆம் நூற்றுண்டு நூல் எனல் பொருந்தாத முடிபு. "நிருபதுங்கராகம்"–அரசன் பெயரடியாக அமைந்த பெயரன்று என்பது ஐயமறத் தெளிதற்குரியது. வேறு காரணங்கள் காட்டினுல் நூல் ஒன்பதாம் நூற்றுண்டினது என ஏற்கலாம். நூலில் இடைச் செருகல் வெண்பாக்கள் இரண்டுள–என முன்னரே குறிப்பும் கூறிக் கொண்டு– "பஞ்சமரபு" எனும் நூல் கடைக்கழகக் காலத்து நூல் எனக் கொள்ளவே முடிகிறது. வாழிய வண்டமிழர் வளர்த்த வளஞ் செழுமிசை. காலம் முற்பட்டதால் நூலுக்குச் சிறப்பு வரவில்லை–சாலச் சிறந்த நுண்மாண் இசைச் செய்தியால் நூல், மாட்சி பெறுகிறது.

'தென்மொழி' தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956.
19 ஈ ஆ (வகுப்பு) 8-ஆம் கட்டளைப்படி.)

1.	வெளியிடும் இடம்:	கடலூர்-1.
2.	காலமுறை:	திங்கள் ஒருமுறை.
3.	அச்சிடுவோர் பெயர்:	திருவாட்டி. மா. தாமரை.
	இனம்.	தமிழர்.
	முகவரி:	தென்மொழி அச்சகம், கடலூர்-1.
4.	வெளியிடுவோர் பெயர்:	திரு. பெருஞ்சித்திரன்.
	இனம்:	தமிழர்.
	முகவரி:	தென்மொழி அச்சகம், கடலூர்-1.
5.	ஆசிரியர் பெயர், முகவரி:	திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1.
6.	ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம் பெயர்களும், முகவரிகளும்.	திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1.

பெருஞ்சித்திரனுகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

1—3—74
கடலூர்-1.

–பெருஞ்சித்திரன்
(ஒப்பம்)

செய்திகள்!

திரு. வீ. சு. இரா. மாணிக்கத்திற்கு இரங்கல்:

தென்மொழி அன்பர். திருவாரூர். திரு. மா. தமிழ்மணி அவர்களின் தந்தை திரு. வீ. சு. இரா. மாணிக்கம் அவர்கள் கடந்த சிலை 15-ஆம் நாள் (30—12—73) மறைந்தார். அன்னாரின் முதல் நினைவுநாளை சுறவம் 8-இல் வைத்திருந்தனர். அதன் நினைவாக உரு. 5—00ஐ தென்மொழி வளர்ச்சிக்கென விடுத்துள்ளார். தென்மொழியும் துன்பத்தில் பங்கு கொண்டு உற்றார்க்கும் மற்றார்க்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

செல்வன் கிருபாகரன் நீடு வாழி!

கடந்த சிலை 17-ஆம் பக்கல் செவ்வாய்க்கிழமை (1—1—74) செல்வன் கிருபாகரனுக்கு ஓராண்டு நிறைவடைந்தது. அதன் நினைவாக செல்வனின் தந்தை தென்மொழி அன்பர். திரு. க அரசமாணிக்கம் தென்மொழி வளர்ச்சிக்கென உரு. 3—00 ஐ விடுத்துள்ளார்கள். செல்வன் கிருபாகரன் நீடுவாழ தென்மொழி வாழ்த்துகிறது.

புதூர்-உலகத் தமிழ்க் கழகப் பொங்கல் விழா!

தஞ்சை மாவட்டம் புதூரில் கடந்த சுறவம் 7-ஆம் பக்கல் ஞாயிற்றுக்கிழமை (20—1—74) உலகத் தமிழ்க் கழகச் சார்பாக பொங்கல் விழா புலவர். திரு. க. அன்பரசு தலைமையில் சிறப்புடன் நிகழ்ந்தது. திரு. இராம. தமிழினியன் வரவேற்புரை நிகழ்த்தினர். தென்மொழி ஆசிரியர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்திப் பரிசு வழங்கினார்கள். திரு. த. ச. தமிழன், திரு. சா. அடலெழிலன், திரு. மா. கயற்கண்ணன், திரு. வெ. மதியழகன், திரு.பழ. மணிவண்ணன், திரு. க. கோவிந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். திரு. சு. கதிரவன் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

பூண்டி-மலர்க் கல்லூரி விடுதி விழா!

தஞ்சை, பூண்டி மலர்க்கல்லூரி விடுதி விழா கடந்த சுறவம் 19 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (1—2—74) யன்று கல்லூரி முதல்வரும் இல்லக்காப்பாளருமான பேரா. திரு. மு. சு. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் நடந்தது. தென்மொழி ஆசிரியர். பாவலரேறு

திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் 'புதுமைத் தமிழ்' என்னும் பொருள்பற்றி அறிவியல் மொழியாக தமிழ் எவ்வாறு அமைந்துள்ளது என்பது குறித்து அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

அரசிறைவன்-கதிர்மதி-நீடு வாழ்க!

கடந்த சுறவத் திங்கள் 21 ஆம் பக்கல் ஞாயிற்றுக்கிழமை (3—2—74) தஞ்சை-கருந்திட்டைக்குடி, கரந்தைத் தமிழ்க் கழகக் கட்டிடத்தில், நெடுநாளைய தென்மொழி யன்பரும், புரக்குநருமாகிய திரு. சி. அரசிறைவன் அவர்களுக்கும் செல்வி கதிர்மதிக்கும் திருமணம் தென்மொழி ஆசிரியர் பாவலரேறு. திரு. பெருஞ்சித்திரனார் அவர்களைக் கரணவாசிரியராகக் கொண்டு சிறப்புடன் நிகழ்ந்தது. திரு. ந. தருமலிங்கம், திரு. புட்பராசு, திரு. இரா. இராசகோபால், திரு. த. ச. தமிழன், திரு. கதிர். தமிழ்வாணன், பாவலர். திரு. இரா. இளவரசு, புலவர். திரு. தி. பாலசுப்ரமணியன், புலவர். திரு. வைத்தியலிங்கம், திரு. இரெ. கோவிந்தராசன், திரு. க. சந்திரசேகரன், பேரா. திரு. திருமாவளவன் ஆகியோர், வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் திரு. சி. அரசிறைவன் அனைவர்க்கும் நன்றியுரைக்க மணவிழா இனிது முடிந்தது. மணமக்கள் இன்புற்று நீடுவாழ தென்மொழியும் வாழ்த்துகின்றது.

பாவநாசம்-இலக்கியப் பெருவிழா!

தஞ்சை, பாவநாசம் கலை இலக்கிய வளர்ச்சி மன்றச் சார்பில் கடந்த சுறவம் 22ஆம் நாள் திங்கட்கிழமை (4—2—74) இலக்கியப் பெருவிழா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. எசு. முத்துவேல் அவர்கள் தலைமையில் புலவர். திரு. பி. சம்பந்தமூர்த்தி அவர்கள் தொடக்கி வைக்க சிறப்புடன் நடைபெற்றது. விழாவில் தென்மொழி ஆசிரியர் பாவலரேறு. திரு. பெருஞ்சித்திரனார் அவர்களை நடுவராகக் கொண்டு "தாய்மொழிப்பற்றே மக்களை ஒன்றுபடுத்தும் வேறுபடுத்தும்" என்னும் பொருளில் பட்டிமன்றம் நடைபெற்றது. பேரா திரு. க. நெடுஞ்செழியன், புலவர். திரு. து. சம்புகேசன், திரு. த. உலூர்துசாமி மூவரும் ஒன்றுபடுத்தும் என்னும் அணியிலும், புலவர் திரு. தமிழ்ச்சேரனார், திரு. மெய்ப்பொருள், திரு. சோசபு நவநீதன் மூவரும் வேறுபடுத்தும்

என்னும் அணியிலும் நின்று அளவையிட்டனர். நடுவர் இறுதியாக இரண்டு அணிகளின் கருத்துகளையும் எடுத்து விளக்கி தாய்மொழிப் பற்றே மக்களை ஒன்றுபடுத்தும் என்று தீர்ப்பு வழங்க விழா இனிது முடிவுற்றது.

முதுகுன்றம்-கல்லூரிப் பேரவை விழா!

தென்னார்க்காடு மாவட்டம் முதுகுன்றத்தில் கடந்த சுறவம் 24ஆம் பக்கல் அறிவன்கிழமை (6—2—74) கல்லூரிப் பேரவை விழா கல்லூரி முதல்வர் முன்னிலையிலும் தமிழ்ப்பேராசிரியர் தலைமையிலும் சிறப்பாக நிகழ்ந்தேறியது. தென்மொழி ஆசிரியர் பாவலரேறு. திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். இறுதியில் செயலர். திரு. செல்வக்குமரவேல் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

பழனி-பண்பாட்டுக் கல்லூரிச் சொற்பொழிவுகள்!

பழனி, பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிச் சார்பில் கடந்த சுறவத் திங்கள் 29, 30 திங்கள், செவ்வாய் (11, 12—2—74) ஆகிய இரு நாட்களில் சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கல்லூரி முதல்வர் பேரா. தி. எசு. ஆர். இராமதாசு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தியபின் மொழியியல் ஞாயிறு. உயர்திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் 'பழந்தமிழ்ப் பண்பாடு, என்னும் பொருள்பற்றி திங்கட்கிழமையும், 'திருக்குறளும் அறவியலும்' என்னும் பொருள்பற்றி செவ்வாய்க்கிழமையும் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தமிழ்ப் பேராசிரியர் திரு அ. மா. பரிமணம் அவர்கள் நன்றிகூற நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.

மன்னர் சரபோசிக் கல்லூரி முத்தமிழ் விழா!

தஞ்சை, மன்னர் சரபோசி அரசினர் கல்லூரிப் பேரவைச் சார்பில் முத்தமிழ் விழா கும்பம் 1, 2 அறிவன், வியாழன் (13,14—2—74) ஆகிய இருநாட்களில் சிறப்புடன் நடைபெற்றது. அறிவன் காலையில் "பெரியார் பெருந்தொண்டு" என்னும் தலைப்பில் கருத்தரங்கு பேரா. திரு. மா. இலக்குவன் அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கியது. தென்மொழி ஆசிரியர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் திருவாரூர். திரு. கே. தங்கராசு அவர்கள் தமிழர் தந்தை பெரியார் படத்தினைத் திறந்து வைத்து சிறப்புரை நிகழ்த்தினார்கள். திரு. என். சர்வாதிகாரியின் நன்றியுரையுடன் காலை நிகழ்ச்சி முடிவுற்றது. பிற்பகல் நிகழ்ச்சி பட்டிமன்றமாக "குறள்நெறிக் கருத்துகள் வெற்றி பெற்றுள்ளன-வெற்றி பெறவில்லை" என்னும் பொருளில் பாவலரேறு. திரு. பெருஞ்சித்திரனார்

அவர்களை நடுவராகக் கொண்டு திரு. அ. மூர்த்தி அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கியது. 'வெற்றி பெற்றுள்ளன' அணியில் திரு. கு. திருமாறன், திரு. கி. வெங்கட்ராமன், திரு. தமிழமுதன், திரு அர. பிச்சைக் கண்ணு, புலவர் திரு. தொல்காப்பியன் ஆகியோரும், 'வெற்றி பெறவில்லை' அணியில் திரு. சோ. சத்தியசீலன், திரு. கு. சிவசுப்பிரமணியன், திரு. சகந்நாதன், திரு. ஆ. செல்வராசு, புலவர் திரு. பஞ்சாப கேசன் ஆகியோரும் பங்கேற்றனர். இறுதியில் நடுவர் இரண்டணி கருத்துகளையும் விளக்கி 'குறள்நெறிக் கருத்துகள் வெற்றி பெற்றுள்ளன' என்று முடிபுரைத்தார்கள். திரு. கு. அருணா சலம் நன்றியுரைகூற மன்றம் இனிது முடிந்தது. வியாழன் "அலை கடல் நடுவே....!" என்னும் தலைப்பில் பாட்டரங்கம் நடைபெற்றது. திரு. கு. அருணாசலத்தின் வரவேற்புரைக்குப் பின் பாவலர். திரு. காவிரிநாடன் தலைமையில் 'புலவன்' என்னும் பொருள் பற்றி பாவலர். திரு. ஞானசெல்வனும், 'உழவன்' என்னும் பொருள்பற்றி திரு. தங்க. வெற்றிவேந்தனும், 'வீரன்' என்னும் பொருள்பற்றி பாவலர். திரு. வைத்திலிங்கமும், 'அறிவியலாளன்' என்னும் பொருள்பற்றி திரு. தா. முகமது இக்பாலும், 'அழகி' என்னும் பொருள்பற்றி புலவர். திரு. தொல் காப்பியனும் பாடினர். திரு. அ. மூர்த்தியின் நன்றியுரைக்குப் பின் விழா இனிது முடிவுற்றது.

நெய்வேலி உ.த.க. பாவாணர் பிறந்தநாள் விழா!

கடந்த கும்பத் திங்கள் 12ஆம் பக்கல் ஞாயிற்றுக்கிழமை (24—2—74) புதுநகர் கலையரங்கில் நெய்வேலி உ.த.க. சார்பில், மொழிஞாயிறு உயர்திரு. ஞா. தேவநேயப்பாவாணர் அவர் களின் 73ஆவது பிறந்தநாள் விழா பொறியாளர். திரு. மா. சீனு வாசன் அவர்கள் தலைமையில் சிறப்புடன் நிகழ்ந்தது. துணைப் பொறியாளர். திரு. அப்பூதி அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். தென்மொழி ஆசிரியர் பாவலரேறு திரு பெருஞ்சித்திரனார் அவர்களும் பேரா. திரு. வீ. பகா. சொல்லழகனார் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். நெய்வேலி செந்தமிழ் இசைக் குழு வினர் யாவேந்தர், பாவாணர், பாவலரேறு பாடல்களை இசைத் தனர். இறுதியாக புலவர். திரு. செங்குட்டுவன் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

உரத்தநாடு-பாவாணர் படிப்பகத் தொடக்க விழா.

கடந்த கும்பத்திங்கள் 12 ஆம் பக்கல் ஞாயிற்றுக்கிழமை (24—2—74) உரத்தநாட்டு முத்தம்மாள் அறக்கூழ்ச்சாலை முகப்பில் பாவாணர் படிப்பகத் தொடக்க விழா புலவர். திரு. அ. சித்திர வேலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பாவலர் திரு. பேகன் அவர்கள் மொழிஞாயிறு பாவாணர் படத்தினைத் திறந்து வைத்தார்கள். புலவர். திரு. த. ச. தமிழன் அவர்கள் படிப்-

பகத்தினைத் தொடக்கி வைத்தார்கள். தென்மொழியும் படிப்பகம் சிறந்து விளங்க வாழ்த்துகிறது.

திரு. அ. மாரிமுத்தின் தந்தையார்க்கு இரங்கல்:

புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்ற உறுப்பினரும் தென்மொழி அன்பருமான புலவர். திரு. அ. மாரிமுத்து அவர்களின் தந்தை கடந்த கும்பம் 20 ஆம் பக்கல் திங்கட்கிழமை (4—3—74) இயற்கை யெய்தினர். அவர்தம் நினைவாக தென்மொழி வளர்ச்சிக்கென உரு. 5—00ஐ விடுத்துள்ளனர். தென்மொழியும் துன்பத்தில் ஆழ்ந்து தனது இரங்கலை உற்றார்க்கும் மற்றார்க்கும் தெரிவித்துக் கொள்கின்றது.

கோவில்முன் மறியல் செய்க!

மீனம் 21 ஆம் பக்கல் அறிவன்கிழமை (3—4—74) தி. க. வினர் சாதியொழிப்பு நடவடிக்கையாக அனைத்து அஞ்சலகங்களின் முன்னும் மறியல் நடத்த உள்ளனர். அவர்கள் "எந்த கிறித்துவனும் பாதிரியாகலாம்! எந்த முகமதியனும் மௌல்வியாகலாம்! ஆனால் பார்ப்பானைத் தவிர்த்த எந்த இந்துவும் பூசாரியாக முடியாது! இப்படி ஆக்கி வைத்தது 'ஆகம'மாம்! அதைக் காக்கும் ஆவணம் அரசியல் சட்டமாம்!!

இம் முறைகேட்டைப் போக்கும் முயற்சியில் நாம் முனைய வேண்டாமா? அதன் முதற்கட்டம்தான் 3 ஆம் நாளைய மறியல்" என்று ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். சரிதானே....

இம்மறியலை அஞ்சலகத்தின்முன் நடத்தினால்தான் நடுவணரசின் கவனத்தை ஈர்க்கலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் கோவில் முன் இம்மறியல் நடந்தால் நடுவணரசென்ன நாடேன் உலகமே இதன் உண்மையை அறியும் என்பதைத்தான் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். (பார்ப்பனர்களுக்கு அஞ்சலகத்தின் முன் மறியல் வைத்தால் அனைத்தும்போல் இதுவும் ஒரு மறியல் என்றுபடுமே யல்லாது கோவில்முன் நடப்பதனைப்போல் உரைக்காது. தங்கள் இதழ்களில் அஞ்சலக மறியலைப் பெட்டிச் செய்தியாகத்தான் வெளியிடுவார்கள். ஆனால் கோவில் மறியலைத் தங்கள் உயிரே போனாற்போல் கொட்டைச் செய்தியாக இட்டு விளம்பரப் படுத்துவர்.) எனவே இம்மறியலைக் கோவில்முன் நடத்துக என்றுரைக்கின்றோம்.

தந்தை பெரியார் முன்பு நடத்த இருந்த போராட்டத்தில் பாவலரேறு. திரு. பெருஞ்சித்திரனார் வயின் தென்மொழியும் தம்மை முழுதும் ஈடுபடுத்திக் கொள்வதாய் அறிவித்திருந்தது அனைவர்க்கும் நினைவிருக்கலாம். தகையின் யாமும் இப்போராட்டங்களில் பங்கேற்க அணியமே! —அமைச்சர். 'தென்மொழி'.

நமக்கு வந்த மடல்கள்.

0: 393: நான் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாகத் தென்மொழியைப் படித்து வருகின்றேன். அதில் தாங்கள் எழுதும் ஆசிரிய உரையை முதலில் படித்து விட்டுத்தான் மற்றவற்றைத் தொடருவேன். எழுச்சிமிக்க கருத்துகளைச் சான்று காட்டியும் எதிரிகளின் முதுகெலும்பு முறியுமாறும் சொற்களின் அமைப்பு இருப்பதுகண்டு தங்களை உளமாற வாழ்த்துகிறேன். மொழி, இனம் இவை விடுதலை பெற்றாக வேண்டும் என்று அசையாத நம்பிக்கையுடைய தமிழன்.

—ப. இளங்கோவன். நம்பியூர்.

0: 394: தனித்தமிழ் வளர்க்கத் தணியா ஆவலுடன்
நனிசிறந்த தொண்டை நாட்டிற் களித்துக்
கனிமொழி பேசுங் கயவர் மிரள
இனியதோர் ஏட்டை இமையாது நடாத்தித்
தமிழர் இல்லங்கள் தழைத்திடச் செய்தீர்
அமிழ்தா யிதனை அனைவருங் கொள்வர்!
இத்தமிழ் நாட்டின் இனிய விடுதலைக்கும்
எத்தகைத் துன்பமும் ஏற்கத் துணிந்தீர்!
தூங்குந் தமிழரைத் துயிலினின் றெழுப்பி
ஏங்குந் தமிழன்னை ஏக்கந் துடைப்பீர்!
மருந்தாம் இலக்கிய மாத விதழை
விருந்தாய் மக்களிடை விட்டுச் சிறப்பீர்
பெருஞ்சித் திரனார் பீடுநடை போட
அருந்தொண் டாற்ற அனைவரும் வருக
என்தமிழ் நாட்டின் ஏற்றம் விழையுந்
'தென்மொழி' ஏடுந் திசையெலாம் வாழ்கவே!

—ப. தண்டபாணி. பொறி. இ; அறி. மு, சென்னை-5.

0: 395: கடந்த (11—10—73) 'கல்கி' இதழில், நமது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பர். ந. சஞ்சீவி அவர்கள், "திருவாட்டி இந்திராகாந்தி, சவகர்லால் நேரு, கே. கே. சா, கலைஞர் கருணாநிதி ஆகியோர் பெயரில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளைகள் உள்ளன போன்றே காந்தியின் பெயரால் ஓர் அறக்கட்டளை நிறுவிக் காந்தீயத்தைத் தமிழகத்தில் பரவச் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். இது கண்டு நான் மிகவும் வருந்துகிறேன். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராக விளங்கும் இவருக்குத் தமிழ்நாட்டில் உள்ள பாவாணர், தோன்றி மறைந்த தனித்தமிழார் மறைமலையடிகள், போன்றாரின் நினைவு ஏன்தான் தோன்றாமற் போனதோ? நாமறியோம். காந்தீயத்தைப் பற்றி நமது சஞ்சீவியார் கவலைப்படுகிறார். அப்படியானால் காந்தியத்தோடு பின்னிப் பிணைந்துள்ள இராம ராச்சியத்தையும், இந்தி இந்நாட்டின் பொதுமொழியாவதையும் தமிழ்த்துறைத் தலைவரான இவர் விரும்புகிறாரோ?

—இறைமகிழ்நன். தஞ்சாவூர்

ஆசிரியரின் மலையகச் செலவு.

வழியனுப்பல்:

தென்மொழி ஆசிரியர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் தி. பி. உ௰௫. கும்பம் உசு (10—3—74) ஞாயிறன்று பகல் 1 மணியளவில் கிளம்பிய வானூர்தி வழி, சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

சென்னை மீனம்பாக்கம் வானூர்தி நிலையத்தில் செம்பியன், உலகமுதல்வி, தி. நா. அறிவொளி, க. ப. அறவாணன், தாயம்மாள், சித்தார்த்தன், தே. மணி, க. குழந்தைவேலன், வலவன், பொன்னவைக்கோ முதலிய தென்மொழி அன்பர்களும் மற்றும் குடும்பத்தினரும் திரளாக வந்திருந்து வாழ்த்துரைத்து ஐயா அவர்களை வழியனுப்பி வைத்தனர். புதுவை அன்பர்கள் அடியார்க்கருளி, அரிமா மகிழ்கோ, கதிர் சிவன் ஆகியோர் மிதிவண்டியிலேயே சென்னை வந்து வழியனுப்பித் திரும்பியது குறிப்பிடத் தக்கது.



வரவேற்பு:

பாவலரேறு அவர்கள் அன்று மாலை 7மணி அளவில் சிங்கப்பூர் சென்றடைந்தார்கள். சிங்கை பாயலேபார் வானூர்தி நிலையத்தில் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியின் நிறுவனர் திரு. இராம. பெரியகருப்பன் அவர்களும் திரு. முல்லைவாணன் முதலிய பாவலர்கள் எழுத்தாளர்கள் ஆகியோரும் பெருந்திரளாக வந்திருந்து மாலை சூட்டி வரவேற்றனர்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்- 607001. தமிழகம்.